முன்னுரை

வங்கக்கவி ரவீந்திரர் ஒரு சிறந்த கவிஞர் தான் : உண்மைக் கவிஞர்தான் ; சிற்சில இடங் களில், ஒரு மகாகவியின் உன்னத ஸ்தானத்தை யும் வகிக்கும் ஆற்றல் பெற்ற மேதை என்பதை, யாராலும் மறுக்க முடியாதல்லவா ?

அவர் இதயம் கனிந்து பழுத்தது ; உள்ளம் பேருண்மைகளைக் கண்டது ; இசை, இன்ப வெள் ளத்தில் மலர்ந்தது, துன்பச் சாகரத்தில் துடித்துக் குமுறிக் குதித்தோடியது.

இதயம் சுழன்றது ; சுழன்றன சொற்கள் ; கண்களும் கவிதையும் இசையோவியங்களாகவே பறந்துவந்தன. உலகமே, கவிதையின் சிறகொலி கேட்டு மயங்கி உறங்கிவிட்டதென்று சொல்(விடலாம்.

இறை வணக்கத்தைக் கவிதை மணத்துடப் விளக்கும் இசை வெள்ளமான கீதாஞ்சலி(த உலகப் புகழ்பெற்ற நோபல் பிரைஸ் (Noத prize)* பெற்றது ; வங்கமொழியில், கீதாஞ்ம, ஒரு ஒப்பற்ற இசைக் கடல் ; புதிய புதிய இம், நுட்பங்களை, தாகூர் வங்க மொழியில் கண்டுடுந்து ; திருக்கிறார். சிருஷ்டியின் எழில், இசைாறு

இங்கிதமான நாதச் சிகரத்தையே எட்டிப் பிடித்து விட்டது என்றுகூடச் சொல்லிவிடலாம்.

'அழகே உண்மை; உண்மையே அழகு'— என்று ஆங்கிலக்கவி கீட்ஸ் அருமையாக அனுபவித்துக் கூறியிருக்கிறன்; எதிலும் அழகைக் காணமுடியுமா, எதிலும் உண்மையைக் காண முடியுமா? இது ஒரு அகண்ட ஆழ்ந்த பிரச்னே; இதை ஒரு கவிஞன்தான், உன்னத இதய அனுபவக் குன்றின்மேல் நின்று விளக்கமுடியும்.

மயில் ஆடுகிறது; குயில் பாடுகிறது; இரண்டையும் கண்ட கவிஞன் உடனே ஆடுகிறன், பாடுகிறன், குதித்துக் குதித்துக் கும்மாளியடிக்கிறன். இதுவே உண்மைக் கவிஞனின் உன்னத மனநிலே; உள்ளம் ஊறிக் கரைந்து கன வுலகில் சிறகடித்து வருகிறது.

அழகையும் உண்மையையும் ஆர்வத்தோடு காண விரைந்தோடும் கவிஞன் உள்ளத்தில், அவுட் காதலும், அழகும், வாழ்வும், மரணமும் கலந்து புரண்டு, பேருண்மைகளேயே வடித்தெடுக்கின்றன; கவிஞன் இதயம், இசையில் மூழ்கி விடுகிறது; அந்த நிமிஷமே, உலகமே கவிஞன் உள்ளத்தில் புகுந்து, இசையோவியமாக மலர்ந்து நிற்கின்றது.

தாகூரின் பாடல்களைப் படிக்கும்போது, பாரதியாரின் 'நந்தலாலா' பாட்டு நினைவிற்கு வருகிறது.

ராகம்-யதுகுல காம்போதி] [தாளம்-ஆதி

காக்கைச்சிறகினிலே நந்தலாலா - நின்றன்
கரியநிறந் தோன்றுதையே நந்தலாலா ;

பார்க்குமரங்க ளெல்லாம் நந்தலாலா - நின்றன்
பச்சைநிறந் தோன்றுதையே நந்தலாலா ;

கேட்கு மொலியிலெல்லாம் நந்தலாலா - நின்றன்
கீத மிசைக்குதடா நந்தலாலா ;

தீக்குள் விரலைவைத்தால் நந்தலாலா - நின்னைத்
தீண்டு மின்பந் தோன்றுதடா நந்தலாலா.

தாகூரின் 'கனிகொய்தல்', கீதாஞ்சாலியைப் போல, ஆழ்ந்த சிந்தனைகள் அடங்கியது; கவிதை எழில் மணக்கும் அபூர்வ சிருஷ்டி; கடவுள், மனித இதயத்தைச் சுற்றிச் சுற்றி வருகிறார்; உலகமே, கலங்கிக் கலங்கித் தெளிகிறது; மனித உள்ளம், சஞ்சலப் பொய்கையில் நீந்தி ஊசலாடுகிறது; ஒளியலைகள் பேரொளிச் சிகரத்தில், நின்று விளையாடுகின்றன.

35-வது பாட்டைப் பாருங்கள்: (வெற்றிக் காளம் ஒலிக்கிறது) இது ஒரு சிறந்த ஆன்மச் சுடரோவியமல்லவா? ஆழ்ந்த அநுபவ மின்னல் முத்திரையோடு பிறந்த இசையோவியம் தான்! (வங்க மூலத்தில்)

ஆழ்ந்த கவிதையில், கவிஞன் உள்ளம் கவிதை மழை பொழிகிறது. இயற்கை மின்னும் போது, இதயம் மின்னுகிறது, கவிதை கொட்டு கிறது. அவ்வளவுதான்! இதுதானே இலக்கிய வெற்றி; இதைத்தானே நாம் கவிஞன் குரல் என்று வாழ்த்துகிறோம்.

கவிஞன் குரல் ஒரு புதுமை: கவிஞன் சொற்கள், திருமணக் குரலில் இன்ப நாதம் எழுப்பும்: சோகத்தையும் கண்டு கலங்காத கவிஞன் சொற்கள், கடவுளின் கதவையே தட்டித்தட்டி எழுப்பும் அகண்ட சக்தி வாய்ந் தவை. திருவாசகம் திருவருளைத் திறந்து காட்ட வில்லையா?

தேவாரத்தில் ஒரு பாட்டைப் பார்ப்போம்:

"தோடுடைய செவியன் விடையேறி
ஓர் தூவெண் மதிசூடி

காடுடைய சுடலைப் பொடி
பூசி யென் உள்ளங்கவர் கள்வன்

ஏடுடைய மலரான் முனை
நாட்பணிந் தேத்த அருள்செய்த

பீடுடைய பிர மாபுர
மேவிய பெம்மானிவனன்றே.

மந்திர மாவது நீறு
வானவர் மேலது நீறு

சுந்தர மாவது நீறு
துதிக்கப்படுவது நீறு

தந்திர மாவது நீறு
சமயத்திலுள்ளது நீறு

செந்துவர் வாயுமை பங்கன்
திரு வால வாயான் திருநீறே.

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினும் மெய்ப்பொருளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே''

திருவருட்பாவில் ஒரு பாட்டை பார்ப்போம்:

"பாடிய வேதங்கள்
தேடிய பாதம்

பக்தி செய் பக்தர்க்குத்
தித்திக்கும் பாதம்

நாடிய மாதவர்
நேடிய பாதம்

வேதாந்த நாட்டுக்கு
நாயக பாதம்

கைவிடமாட்டேனென்
றூதூது சங்கே

பொன்னடி தந்தானென்
றூதூது சங்கே

பொன்னம் பலத்தானென்
றூதூது சங்கே"

கவிஞன் இசையில், இறை இரங்கி மனங் கனிந்து கரைந்தே மறைந்து விடுகிறது. கவிஞன் இதயத்தினின்று வெடித்து வருகின்ற சோக கீதத்திலும், கண்ணீர் முத்துக்கள் அரும்பிக் கடவுளை நோக்கிக் கண்திறக்கின்றன.

கவிதை என்றால், விசித்திர யாப்பின் விசித்திர அலங்கோலமல்லவே ? கவிஞன் இதய ரீங்காரமே கவிதை, கவிதை. இதுவே கவிஞனின் இதய வீணை.

(2)

பல வேதனைகளில் தோய்ந்து தத்தளிக்கும் உலகம், கடவுளைப்பற்றிச் சிந்திக்காமலிருக்க முடியுமா ? துன்பம் வந்தால்தானே, ஒருவன் கடவுளைப்பற்றிச் சிந்திக்கிறான் ; உலகத் துன்பங்களைக் கண்டு துடிக்கும் கவிஞன் நெஞ்சில், வேதனை கனல்கிறது ; கண்ணீரில் பூத்த கமலங்களாகவே, பாசுரங்கள் பறந்து வருகின்றன ; கவிஞர் ரவீந்திரநாத் தாகூரும், துன்பக் கடலில் தத்தளித்தபின்தான், இவ்வளவு அபூர்வமான பாசுரங்களைப் பாடித்தந்திருக்கிறார்.

தாகூர் தாய் மொழியில் அதிகமான பற்றுடையவர் ; வங்க மொழியிலேதான், அருமையான கருத்துக்களை, புதிய முறையில், அரிய இனிய சாகித்யங்களாகவே பாடியிருக்கிறார். அத்தகைய கருத்துக்களை, உலகமே அறிந்து அனுபவிக்கும்படி ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துத் தந்திருக்கிறார். ஒருவன் தாய்மொழியில் முதல்

முதலாக நன்ருய்ச் சிந்தித்து அனுபவித்து எழுத முடியும் என்ற உண்மையை நன்கு அறிந்து உணர்ந்தவர். டி. கே. சி. அவர்களும் அதே கருத்தை உறுதிசெய்து, ஒவ்வொரு தமிழனும் தமிழில் சிந்தித்து எழுதிப் பாடி அனுபவிக்க முடியுமேயொழிய, ஆங்கிலத்திலோ தெலுங்கிலோ பாடல்களை அனுபவிக்க முடியுமென்று நினைப்பது அசாத்தியமான காரியம் என்று பல தடவைகளில் சொற்பொழி வாற்றியிருக்கிருர்கள்.

உழலும் உலகத்தில் துடிக்கும் ஒருவன், பொறுமையிழந்தால், கடவுளைக் காணவே முடியாது; இறைவன் இயல்பையோ, அன்பையோ அறிந்து கொள்ளவோ, உணர்ந்து கொள்ளவோ முடியாதுதானே ? புயலடிக்கும்போது, பொறுமை வேண்டும்; மாலுமி, பெருமுயற்சியோடு, பொறுமையோடு கொந்தளிக்கும் அலையோடு போராட வேண்டும். ஒவ்வொரு தோல்விச் சின்னமும், வெற்றியைத் தொடும் ஏணியில் முதலாவது மின்னல் படியாகவே விரைவில் அமைந்துவிடும்; இது ஆழ்ந்து சிந்திக்கவேண்டிய விஷயம்.

கலகத்தால் உலகம் கலங்கிவிட்டால், கடவுள் ஒளிவீசி இருளை விரட்டியே விடுவார் ; கலகத்தின் முடிவில் கலக்கத்தையே மாற்றி, சாந்திப் பால்

தருவார்,—இதைப்பற்றி நாம் ஏன் கவலைப்பட வேண்டும்? துடிப்பவன் கண்ணீர் காயும் வரை, கடவுள் காத்திருப்பார், சஞ்சலத்தை அமைதியாக அருமையாக, எதிர்பாராத விதமாக மாற்றிவிடு வார் என்பதில் ஐயமுண்டோ?

வாழ்க்கையில் மனிதனை மனிதன் மறக்கவே கூடாது; கடவுளை நோக்கிச் செல்லும் மனிதன், கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட கோடான கோடி ஜீவராசிகளையும் அன்போடு தழுவிச் செல்ல வேண்டும்: ஜீவராசியும் அந்தந்த எல்லையில் சுதந்திரத்தோடு வாழவேண்டும். சர்க்கஸ்காரன் பணம் சம்பாதிக்க வேண்டுமானால், புலியை நெருப்பு வளையத்தில் பாயும்படி செய்து அடிமைப் படுத்தலாமா? பெண்களின் அரை நிர்வாணத்தை உடையின்றிக் கப்பலேற்றலாமா? இதுவே தீய செயல், கொடிய சம்பாத்தியம்: நாய் விற்ற பணம் குலைக்குமா என்று அறிவின்றிப் பேசுவதில் அர்த்தமில்லை! தவருன லாபத்துக்குச் செய்யும் தவருன முயற்சிகள் யாவும், கடவுளின் நெற்றிக் கண்ணைத் திறந்து கனல் மழை பொழியச் செய்யு மல்லவா? கடவுளையே அடியோடு மறந்து, பொருளாதார இறுமாப்புடன் சித்திரவதை செய் யும் சண்டாளர்களையே, தாகூர் கடிந்து பேசுகிருர். நமது நெஞ்சு நேரானல், இறைவன் நம்மைத் தழுவி நிற்பான்.

சிற்றின்பத்தில் சிக்கிக்கொண்டு குரங்காட்டம் ஆடாமல், பேரின்பத்தை நோக்கியே வாழ வேண்டும், மனிதன், மனிதன், மனிதன்! கடவுள் நம்மைக் கண்டுபிடிப்பதற்கு முன், நாம் கடவுளைக் காண முயலுவது நல்லதல்லவா? நற்செயலே நாம் செய்யவேண்டும்: அஹிம்சை தான் அதன் இதய அஸ்திவாரம். பிறர் வருந்தும்படி நாம் எதைச் செய்தாலும், அது பாபம் தான்: கொள்ளை லாபம் சம்பாதிப்பதும், பிறருக்கு ஹிம்சை தானே, பிறர் உயிரை வாங்குவது போலத்தான். நமது வாழ்க்கையில் நாம் செய்யும் நல்ல செயல்களே, அறச் செயல்கள்; தருமம் தலைகாக்கும் என்பதும் நிதரிசனமாகவே உண்மையாகி விடுகிறது. நற்செயல்கள் எல்லாம், இனிய பேரின்பக் கனிகள் தான்: தொடர்ந்த தித்திப்பைக் கொண்ட, பழுத்த கனிகள். கடவுள், அன்பு வெள்ளத்தில், மலர்ந்த முகத்துடன் அத்தகைய கனிகளையே கேட்கிறார். சண்டாளர்கள் தான், வெறுங்கையுடன், இரத்த வெறியுடன், கடவுளை மறந்து கருணையற்ற பூதங்கள் போலக் குதிப்பார்கள்.

* * *

துன்பத்தில் தோய்ந்து, வறுமையில் சுழன்று கதறிய ஆங்கிலக்கவிஞன் பிரான்சிஸ்

தாம்சன், (Francis Thompson) கடவுளின் அகண்ட திருவருளைப்பற்றி 182 வரிகளில் (The Hound of Heaven) பாட்டை பாடியிருக்கிருன். ஆசையடக்கி மதியால் விதியையே மிஞ்சி, இறைவன் தரிசனம் பெற முயலலாம் என்பது தாம்சன் கருத்து: தாகூரின் 'கனி கொய்தல்' நூலின் சாரமே, இந்தப் பாட்டில் ஊடுருவிப் பாய்கிறது. தாம்சன், பைபிளைப் (Bible) படித்து விட்டு, இரண்டு வரிகளை எடுத்துக்கொண்டு, கவிதை வெறியோடு மேலே சொன்ன பாட்டைப் பாடிவிட்டான். சொற்கள், கவிதை நலங் கொண்ட சொற்கள் ; அகண்ட ஆழ்ந்த கற்பனைக் கொடிகள் பறக்கின்றன: கடவுளின் கைதெரிகிறது, கடவுளின் குரல் கேட்கிறது, பக்தன் சரண்புகுந்த நிலை, அதி அற்புதம்தான். அஹிம்சா அரசியல் யோகி மகாத்மா காந்தியடிகளும், ஸ்ரீ ராஜாஜியும் தாம்சன் கவிதையை நன்கு உணர்ந்தவர்கள்.

தாகூரின் 'கனி கொய்தல்', கீதாஞ்சலியைவிட மிக ஆழமாக இருக்கிறது: அருளாவேசம் அதிகம், கற்பனை மின்னல் அதிகம், கவிதை எழில் அதிகம்; சில பக்கங்கள், சொல்லோவியங்களாகவே மலர்ந்து விடுகின்றன. சில பாடல்களை, சித்திர விளக்கத்தால் தெளிவு படுத்தலாம்: காவி

யத்தை, ஓவியத்தால் சுட்டிக் காட்டும் மனநிலை, தாகூரின் கலையில் ஒருபகுதி.

இந்த நூலை ஆங்கிலத்திலிருந்து மொழி பெயர்த்து வெளியிட அனுமதி தந்த லண்டன் மாக்மிலன் கம்பெனியாருக்கு எமது நன்றி உரியது. கவிஞர் ரவீந்திரரின் டிரஸ்டிகளுக்கும் எங்கள் நன்றி.

-வி. ஆர். எம். செட்டியார்.

“ நாதவிந்து கலாதீந மோநம
வேத மந்திரசொ ரூபாந மோநம
ஞான பண்டித சாமிந மோநம
வெகுகோடி

தீப மங்கள சோதிந மோநம
தூய அப்பல லீலாந மோநம
தேவ குஞ்சரி பாகாந மோநம
அருள்தாராய் ”

— திருப்புகழ் : அருணகிரிநாதர்.

APPRECIATION

By Mr. C. SOMASUNDARAM CHETTIAR,
L. L. B. (London) Bar-At-Law

I strongly feel that Tagore's Fruit-Gathering has a superb poetic value:

Tagore's imagination is too subtle for translation: richer thoughts hum and reverberate with the heaving heart of the Poet challenging the shining Script of Fate; God smiles, and outstretches his glowing Hand.

Sri V. R. M. Chettiar has given a lucid rendering in Tamil: his poetic feelings surge and flash, irradiating his poetic-prose magnificently.

I sincerely congratulate him on his marvellous triumph in the translation.

Sevvur 5th Aug., 47.

கனி கொய்தல்

உனது ஆக்ஞை பிறந்தால், நான் எனது கூடைகள் நிறையக் கனிகளைத் திரட்டி உன் சந்நிதியில் வைக்கிறேன்; ஆனால் சில கனிகள் பழுக்கவில்லை, சிலவற்றைக் காணவில்லை.

பருவம் முதிர்ந்து கனக்கிறது, நிழலில் தலைவன் குழல் இசைக்கிறது, அதில் துன்பம் தொனிக்கிறது.

ஃ ஃ

உனது ஆக்ஞை பிறந்தால், நான் ஆற்றில் தோணியில் வருகிறேன்.

மாசி மாதக் காற்று துடித்துக் குமுறுகிறது; அது உறங்கும் அலைகளை முணு முணுக்கச் செய்கிறது.

தோட்டத்தில் பூராப்பலனும் கிடைத்துவிட்டது; களைத்த அந்தி நேரத்தில், அஸ்தமன நிலையில் கடற்கரையில் உனது இல்லத்திலிருந்து, அழைப்பு வருகிறது.

(2)

இளமையில் எனது வாழ்க்கை ஒரு மலர் போல இருந்தது – தனது நிறைவிலிருந்து, ஒன்று அல்லது இரண்டு இதழ்களை இழந்தபின், அதற்காக வருந்தாத மலர் அது; ஏனெனில், வசந்தக்காற்று, இம்மலரினிடம் பிச்சை கேட்கிறது.

ஆனால் இப்போது, எனது இளமைப் பருவத்தின் இறுதியில், எனது வாழ்க்கை ஒரு கனிபோல் இருக்கிறது – எந்தச் சிறு பகுதியையும் உதிர்க்கச் சக்தியின்றி, தனது நிறைந்த இனிமைச் சுவையுடன் தன்னையே பூராவும் அர்ப்பணிக்கத் தயாராயிருக்கிறது இந்தக் கனி.

(3)

புது மலர்களுக்காகவா கோடை விழா நிகழ்கிறது? காய்ந்த இலைச் சருகுகளுக்கும், வாடிய மலர்களுக்கும், இவ்விழா வரவில்லையா?

கடற்பாட்டு, பொங்கும் அலைகளுடன் தானா பாடுகிறது? இறங்கும் அலைகளுடன், அது பாடவில்லையா?

இரத்தினக் கம்பளத்தில், நகைகள் நெய்யப்படுகின்றன. எனது அரசன் அங்கே நிற்கிறான்; அவனுடைய காலடியைத் தொட்டு வணங்க, பல பொறுமையுள்ள களிமண் உருவங்கள் காத்துக்கொண்டிருப்பதைப் பாருங்கள்!

எனது தலைவன் அருகில் உட்கார்ந்திருப்பது, சில தந்திரிகளும் பெரியார்களுமே; ஆனால் தலைவன், தன் கைகளில் ஒரு அறிவிலியைக் கட்டிக்கொண்டான்; என்னைத் தலைவனது சாஸ்வத ஊழியனாகச் செய்துவிட்டான்.

(4)

காலையில் விழித்ததும், தலைவன் கடிதத்தைக் கண்டேன்.

அதன் பொருளென்ன என்று எனக்குத் தெரியாது. எனக்குப் படிக்கத் தெரியாது.

புத்திமான் புத்தகங்களுடன் வாழட்டும், நான் அவனைத் தொந்திரவு செய்யவில்லை; ஏனெனில்! இந்தக்

கடிதப் பொருளை அவன்தான் வாசித்து உணர முடியுமா என்று யாரால் சொல்ல முடியும்.

அக்கடிதத்தை, நான் என் நெற்றியில் ஒற்றிக்கொண்டு, இதயத்தில் பதித்துக் கொள்கிறேன்.

இரவு சாந்த நிலைக்கு வந்ததும், நட்சத்திரங்கள் ஒன்றன் பின்னென்ருய் வெளி வரும்போது, அந்தக் கடிதத்தை என் தொடையில் விரித்து வைத்துக் கொண்டு, நான் மௌனமாயிருப்பேன்.

இரையும் இலைகள் அதன் பொருளை எனக்குப் படித்துக் காட்டும். ஓடும் ஓடை அதைப் பாடிக் காட்டும். ஏழு நட்சத்திர மேதைகளும் விண்ணிலிருந்தே எனக்கு அதைப்பாடிக் காட்டும். நான் தேடுவதை நான் காணமுடியாது. நான் எதைப் படிப்பதென்று எனக்கு விளங்கவில்லை; ஆனல் இந்தப் படியாக் கடிதம், என்னுடைய சுமைகளைக் குறைத்து, எனது சிந்தனைகளைப் பாடல்களாகவே மாறறி விட்டது.

(5)

அதன் பொருள் விளங்காத நிலையில், உனது ஞாபகச் சின்னத்தை ஒரு கைபிடி மண் மறைக்கக்கூடும்.

இப்போது எனது அறிவின் வளர்ச்சியால், உன்னை மறைத்த எல்லாப் பொருள்களையும் நான் அறிந்து கொள்கிறேன்.

மலர்களின் இதழ்களில், அது வருணமாகத் தீட்டப்பட்டிருக்கிறது; அதே பொருளை, அலைகள் தங்கள் நுரைகளில் மின்னிக்காட்டுகின்றன; மலைகளின் சிகரங்கள், அந்த உண்மையையே உயர்த்திக் காட்டுகின்றன.

உன்னைவிட்டு என் முகம் திரும்பியபோது, நான் கடிதங்களின் பொருளைத் தவறாகவே படித்து அறிய முடியாமல் தவித்தேன்.

(6)

ஓடும் வீதிகளில் எனது பாதை மறைந்தே போகிறது. நான் வழியறியாது அலைகிறேன்.

அகண்ட நீர் நிலையிலும், நீல வானத்திலும், பாதையின் கோடு தெரியவே இல்லை.

பட்சிகளின் சிறகுகளும், நட்சத்திரச் சுடர்களும், அலையும் பருவங்களின் மலர்களும் பாதையை மறைக்கின்றன.

கண்டறிய முடியாத பாதையின் ஒளி, எனது இரத்த 'அலைகளில் ஓடுகிறதா என்று என் இதயத்தையே நான் கேட்கிறேன்.

(7)

ஐயோ, நான் வீட்டில் தங்க முடியவில்லையே; வீடு எனக்கு வீடாகத் தோன்ற வில்லையே; ஏனெனில் அந்த அழியாத, அறிமுகமில்லாத அன்னியன் என்னை அழைக்கின்றான், அவன் வீதி வழியே போகிறான்.

அவன் காலடி யோசை எனது இதயத்தில் ஒலிக்கிறது; அது நோகிறது.

காற்றுக் குமுறுகிறது; கடல் முனங்குகிறது.

எனது கவலைகளும் சந்தேகங்களும், அலையும் அலைகளைத் தொடர்ந்து செல்லட்டும்; ஏனெனில் அந்த நூதன அன்னியன் என்னை அழைக்கிறான், அவன் வீதி வழியே போகிறான்.

(8)

இதயமே! புறப்படத் தயாரா யிரு! பின்னால் வர எண்ணுபவர்கள், தாமதித்து வரட்டும்.

ஏனெனில், காலை விண்ணில், உன் பேர் கூப்பிடப்பட்டது. யாருக்காகவும் தாமதிக்கவேண்டாம்.

அரும்பின் ஆசை, இரவையும் பனியையும் தேடுவது; ஆனால் மலர்ந்த பூ, சுதந்திர ஒளியையே கேட்கிறது.

இதயமே, உனது உறையைக் கிழித்துக் கொண்டு வெளியே வா!

(9)

எனது சேமித்த புதையலின் பக்கம் நான் தயங்கி நிற்கும்போது, தான் பிறந்த கனியையே இருட்டில்

விழுங்கும் ஒரு புழுவைப் போல நான் என்னைக் கருதினேன்.

இந்த உளுத்த சிறையை நான் உதறித் தள்ளுகிறேன். நான் இந்த அழியும் மண் பாண்டத்தில் அலைய விரும்பவில்லை. ஏனெனில் நான் அழியா இளமையைத் தேடியே செல்லுகிறேன். எனது வாழ்க்கையுடன் ஒன்றிக்கலக்காத யாவற்றையும், எனது சிரிப்பைப்போல லேசாயில்லாத பொருள்களையும் உதறியெறிகிறேன்.

காலத்தை ஊடுருவிப் போகிறேன், ஆ! எனது இதயமே, உனது ரத்தத்தில், அலைந்து பாடும் கவிஞன், நர்த்தனம் செய்கிறான்.

(10)

எனது கையைப் பிடித்துக் கொண்டு, என்னை உன் பக்கம் இழுத்து, பல மனிதர்களின் முன், உயர்ந்த பீடத்தில் என்னை உட்கார வைத்தாய்; நான் சாந்தமடையாது மனங்கலங்கி, இங்கு மங்கும் திரும்பச் சக்தியற்று, எனது பாதையில் நடக்க முடியாத நிலைக்கு வந்துவிட்டேன்.

நடக்கும்போது, சந்தேகமும் தர்க்கமும், ஒவ்வொரு காலடியிலும், என்னைச் சூழ்ந்துகொண்டு, பிறர் மனங் கோணாமல் நான் நடக்கத் தத்தளித்தேன்.

இறுதியில் எனக்கு விடுதலை கிடைத்து விட்டது!

உதையும் கிடைத்தது, துன்ப பேரிகையும் ஒலித்தது, மண்ணில் என் இருக்கை தாழ்த்தப்பட்டது.

என் முன் பாதைகள் திறந்து கிடக்கின்றன. எனது சிறகுகள் விண்ணை நோக்கி விரிகின்றன; இரவின் உதய நட்சத்திரங்களைச் சேரவே போகிறேன்; நிழலின் ஆழத்தில் மறையவே செல்லுகிறேன்.

கோடைப் புயலால் துரத்தப்படும் மேகம்போல் நான் செல்லுகிறேன். கோடை மேகம், தனது தங்கக் கிரீடத்தைக் கழற்றி எறிந்து விட்டு மின்னற் சங்கிலியில் தொங்கும் இடியேறு போல, ஒரு கைவாளாகவே தொங்குகிறது.

கவலை தோய்ந்த இன்பத்தில், ஒதுக்கப் பட்டவர்களின் புழுதிப் பாதையில் நான் ஓடுகிறேன்; உனது இறுதி வரவேற்பையே நெருங்கி வருகிறேன்.

கருப்பையினின்று வெளி வந்த குழந்தை உடனே தாயைக் காண்கிறது.

உன்னை விட்டு நான் பிரியும்போது, உன் இல்லத்தை விட்டு எறியப்படும் போது, நான் உனது திருமுகத்தைப் பார்க்கும் சுதந்திரத்தை அடைகிறேன்.

(11)

இந்தத் தங்கச் சங்கிலியை நான் அணிந்திருப்பது, எனக்கே அவமானமாக இருக்கிறது.

என் கழுத்தை இரணப்படுத்துகிறது; நான் அதைப் பிய்த்து எடுக்க முயலும் போது, அது என் கழுத்துக்கு ஒரு சுருக்காகவே வந்து விடுகிறது.

என் தொண்டையை இறுகப் பிடித்து, என்னைப் பாடவிடாமல் திணறவடிக்கிறது.

எனது பிரபுவே, இந்தச் சங்கிலியை உன் கையில் கொடுத்து விட்டால், எனக்கு விடுதலைதான்!

அதை என்னிடம் வாங்கிக்கொள்; அதற்குப் பதிலாக என்னை ஒரு பூமாலையால் உன்னிடம் இணைத்துக் கொள்வாயாக; ஏனெனில், என் கழுத்தில் இந்தத் தங்கச் சங்கிலியை அணிந்து கொண்டு உன் முன் நிற்க எனக்கே வெட்கமாயிருக்கிறது.

(12)

கீழே 'ஜம்னு' நதி ஓடுகிறது; சுத்தமாயும் வேகமாயும் ஓடுகிறது; மேலே உயரத்தில், நதியின் கரை புருவத்தைச் சுளித்து, வெறுப்பைக் காட்டிக்கொண்டு நிற்கிறது.

குன்றுகளில் மண்டிய காடுகள் இருண்டே மிளிர்கின்றன; நீர் வீழ்ச்சிகள் குன்றின் குறுக்கே ஓடி வழிகின்றன; குன்றுகள் குழுமி நிற்கின்றன.

சீக்கிய குரு கோவிந்தர், குன்றின் மேல் குந்திக்கொண்டு வேதப் புஸ்தகங்களைப் படித்துக் கொண்டி

ருந்தார். அவருடைய சிஷ்யன், ரகுநாதன், செல்வச் செருக்குடன், அவர்முன் வந்து பணிந்து வணங்கிச் சொன்னான்: "தாங்கள் வாங்கத் தகுதியற்ற ஒரு எளிய நன்கொடை கொண்டுவந்திருக்கிறேன்."

இப்படிச் சொல்லிக் கொண்டு குருவின் முன், வயிரம் இழைத்த இரண்டு தங்க வளையல்களைக் காட்டினான்.

குரு அவ்வளையல்களில் ஒன்றை எடுத்து, தன் விரலில் வைத்துச் சுழற்றிப் பார்த்தார். அதிலுள்ள வைரங்கள், ஒளியலைகள் வீசின.

திடீரென்று, அந்த வளையல் நழுவிக் கீழே ஆற்றில் விழுந்து உருண்டோடியது.

ரகுநாதன், "ஐயோ!" என்று அலறிக்கொண்டு, ஆற்றில் குதித்தான்.

குரு, தன் கண்களைப் புத்தகத்தில் ஆழப் பதித்துக்கொண்டு படிக்க ஆரம்பித்துவிட்டார். ஆற்று நீர், தன் இதயத்தில் வளையலைக் கவ்விக் கொண்டு, சுழன்றோடிவிட்டது.

மங்கலான அந்தி வேளையில், ரகுநாதன் களைத்துப் போய், நனைந்த உடலுடன் குருவினிடம் வந்தான்.

அவன் பெருமூச்சு விட்டுக்கொண்டு சொன்னான்; "அந்த வளையல் எங்கே விழுந்ததென்று இப்போது சொன்னாலும், நான் அதை மீண்டும் எடுத்து வருவேன்."

குரு, மற்றொரு வளையலையும் எடுத்து, ஆற்றில் எறிந்து, "அதோ, அந்த இடம் தான்," என்று சொன்னார்!

(13)

கொஞ்சம் அசைந்தாலும், ஒவ்வொரு நிமிஷமும் நான் உன்னையே சந்திக்கிறேன், பிரயாணத் தோழனே!

உனது திருவடிகளின் ஒலியை ஒட்டியே நான் பாடி வருகிறேன்.

உனது உயிர்க் காற்றைத் தீண்டியவன், நதியின் கரையிலுள்ள நிழலில் ஒதுங்க மாட்டான். அவன் புயலை எதிர்த்துத் தோணியைச் செலுத்துவான்; கடலின் கொந்தளிப்பையும் தாண்டியே செல்லுவான்.

வீட்டின் கதவுகளைத் திறந்து கொண்டு வெளியே வேகமாய் வருபவன், உன்னையே எதிர்கொண்டழைப்பான்.

லாப நஷ்டத்தைக் கணக்கிடத் தயங்காதவன், தன் இதய பேரிகையின் துடிப்பை உணர்வான்; ஒவ்வொரு அடியும் காலெடுத்து வைக்கும் போதும், உன்னுடன் பின்பற்றிப் பிரயாணம் செய்யவே, அவன் இதயம் துடித்துக் கதறும். ஆ, பிரயாணத் தோழனே!

(14)

இந்த உலகத்திலுள்ள பொருள்களில், எனக்குரிய நயமான பகுதி, உன் கைகளிலிருந்தே கிடைக்கும்.

அதனால்தான், எனது கண்ணீர்த் துளிகளில் உனது ஒளி மின்னித் துடிக்கிறது.

வேறு யாரும் என்னை யழைத்தால் நான் அவர்களுடன் போக விரும்பவில்லை; ஏனெனில், 'என்னுடைய வழித் துணையாயுள்ள உன்னை நான் இழந்துவிட நேரிடுமல்லவா?

நான் பிடிவாதமாகவே என்னிஷ்டம் போல் நடந்து சென்றேன்; ஆனல் எனது அறியாமையே உன்னைத் தூண்டி என் கதவண்டை கொண்டு வந்து விட்டது.

இந்த உலகில் நயமான எனக்குரிய பொருள், உன் கைகளிலிருந்தே கிடைக்குமென்று முன்னமே நீ செய்திருக்கும் வாக்குறுதி இன்னும் நினைவிலிருக்கிறது.

(15)

நீ புரியும்படியாகவே பேசுகிருய், எனது தலைவனே! ஆனல் உன்னைப் பற்றிப் பேசுபவர்கள், புரியாத தர்க்கம் செய்கிருர்கள்.

உனது நட்சத்திரங்களின் குரலையும், உனது மரங்களின் மௌனத்தையும் நான் உணர்கிறேன்.

எனது இதயம் ஒரு மலர்போல மலருமென்று எனக்குத் தெரியும்; ஒரு இரகஸியச் சுனையில், எனது வாழ்க்கை நிறைந்து, ஆரம்பமானது என்பதும் தெரியும்.

பனிப் பிரதேசத்தின் தனிமையிலி ருந்து பறந்தே வரும் பக்ஷிகள்போல, உனது கீதங்கள் எனது இதயத்தில் கூடு கட்டப் பறந்து வருகின்றன; சித்திரையின் வெப்பத்தை எதிர்த்து நிற்கவே, என் இதயத்தில் கூடு கட்டு கின்றன; ஆனந்தமான பருவம் வரும் வரை நான் காத்திருக்கத் தயாராக இருக்கிறேன்.

(16)

அவர்கள் வழியைத் தெரிந்து, குறு கிய சந்தில் உன்னைத் தேட முயன் ருர்கள். ஆனால், எனது அறியாமை யால், நான் இரவெல்லாம் அலைந்தேன்.

இரவில் உன்னைக் கண்டு பயப்படக் கூடிய அளவு நான் கல்வி கற்கவில்லை; ஆதலால், என்னை யறியாமலே, உன் கதவண்டை வந்துவிட்டேன்.

யூக முள்ளவர்கள், என்னைக் கடிந்து பேசினர்கள்; அவர்கள் போன சந்தில் நான் வரவில்லையே என்று திட்டி னர்கள்.

நான் சந்தேகத்தில் திரும்பினேன்; ஆனால் நீ என் கைகளை இறுகப் பிடித்துக் கொண்டாய்; ஒவ்வொரு நாளும், தந்திரிகள் என்னை இதற்காகவே உரக்கத் திட்டுகிறார்கள்.

(17)

என் வீட்டிலிருந்து என் மண் பாண்டத்தை எடுத்து வந்தேன் - "குழந்தைகளே, உங்களுக்கு வழி தெரிய நான் வெளிச்சம் காட்டுகிறேன்" என்று சொன்னேன்.

நான் திரும்பிவரும் வரை, இரவு இருண்டே யிருந்தது; வீதியில் நிசப்தம்; நான் கூவினேன், "ஓ, சுடரே! என்மேல் ஒளி வீசுவாய், ஏனெனில் எனது மண் விளக்கு, உடைந்து மண்ணில் மடிந்து சிதறிக் கிடக்கிறது."

(18)

இல்லை: அரும்பு உன் கைகளில் மலராது.

மொட்டை இடி, அடி; அதை மலர்ப்பிக்கும் சக்தி உன்னிடம் இல்லை; உன் சக்தியை மீறியது இந்த நிகழ்ச்சி.

நீ தீண்டினால், அது கசங்கிவிடும்; நீ அதன் இதழ்களைப் பிய்த்து மண்ணில் எறிகிறாய்.

ஆனால், வருணங்கள் தோன்றவில்லை; மணமும் தோன்றவில்லை.

ஆ! உன்னால் மொட்டை மலர்த்த முடியாது.

அதை மலரச் செய்யும் தலைவன், மிக எளிய முறையில் செய்துவிடுகிறான்.

தலைவன் கடைக்கண் பார்வையில், உயிர்ச்சத்து, மலரின் நரம்புகளில், பரவித் துடிக்கிறது.

தலைவனின் உயிர்க்காற்றில், மலர் சிறகு விரித்து, காற்றில் நர்த்தனம் செய்கிறது.

இதய ஆர்வங்களாகவே, வருணங்கள் மண்டி விடுகின்றன; மலரின் மணமும், ஒரு இன்ப இரகசியமாகவே பரவி வருகிறது.

அரும்பை மலர்ப்பிக்கும் தலைவன், எவ்வளவு எளிய முறையில் அதைச் செய்து விடுகிறான்!

(19)

தோட்டக்காரன் 'சூதாஸ்', அவனுடைய தாமரைக் குளத்திலுள்ள கடைசி மலரைப் பிடுங்கினுன்; மழைக் காலத்திற்குப் பின் மிஞ்சிய மலர் இது ஒன்றே அரண்மனை வாயிலுக்குப் போய், அரசனிடம் இதை விற்க முயன்ருன்.

போகும் வழியில், ஒரு பிரயாணி அவனிடம் சொன்னுன்: "இந்த இறுதி மலருக்கு உனது விலையைச் சொல், நான் அதை புத்த பகவானுக்குச் சூட்டுகிறேன்."

சூதாஸ் பதிலிறுத்தான்: "ஒரு தங்க 'மேஷே' கொடுத்தால், நான் அதை உனக்கு விற்கமுடியும்."

பிரயாணி அந்த விலை கொடுத்தான்.

அதே நிமிஷத்தில், அரசன் வெளியே வந்தான், அவனும் மலரை வாங்க விரும்பினுன். புத்த பகவானைப் பார்க்கப்போகும் வீதியில் அவன் நினைத்தான்: "மாரி காலத்தில் மலர்ந்த மலரை, புத்தர் பாதங்களில் வைத்துப் பூஜிப்பது எவ்வளவு நன்ருயிருக்கும்!"

ஏற்கனவே அதன் விலையாக ஒரு தங்க 'மேஷே', பிரயாணி தந்ததாகச் சொன்னான், தோட்டக்காரன்.

உடனே அரசன் அதைப்போலப் பத்துப் பங்கு விலை தருவதாகச் சொன்னான்; ஆனால், பிரயாணி அதைப்போல இரண்டு பங்கு விலை தருவதாகச் சொன்னான்.

பேராசை பிடித்த தோட்டக்காரன், இன்னும் அதிகமான விலையை எதிர்பார்த்தான்; வணக்கத்துடன் சொன்னான், "நான் இந்த மலரை விற்க முடியாது."

மாந்தோப்பின் சாந்தமான நிழலில் நகரின் எல்லைக்கு அப்பால், புத்த பகவான் முன், சூதாஸ் நின்றான்; புத்தரின் உதடுகளில், அன்பு மௌனமாய் தவழ்ந்தது; பனியில் நனைந்த, இலை யுதிர் காலத்தில் எழுகின்ற உதய வெள்ளிபோல, புத்தரின் கண்களில், சாந்தி ஜோதி, வெள்ளத்தை அள்ளி வீசியது.

சூதாஸ், அவருடைய முகத்தை உற்று நோக்கினான், அவருடைய

பாதங்களில் மலரை வைத்தான், கீழே விழுந்து தலை வணங்கிக் கும்பிட்டான்.

புத்தர் சிரித்துக் கொண்டு கேட்டார்: "உனது ஆசை என்ன, என் மகனே?"

சூதாஸ் சொன்னான்: "உமது திருவடிகளைக் கொஞ்சமாவது தீண்டும் இன்பமே!"

(20)

ஓ! இரவே! திரையிட்ட இரவே! என்னை உனது கவிஞனாக்குவாய்!

உனது நிழலில், மௌனமாகப் பல யுகங்களாகச் சிலர் காலம் கழித்திருக்கிறார்கள்; அவர்களுடைய பாடல்களையே நான் பாடுகிறேன்.

பல உலகங்களின் வழியே, சக்கரமின்றி நிசப்தமாய்ச் சுழலும் உனது இரதத்தில் என்னையும் ஏற்றிக் கொள்: கால மாளிகையில், இருண்ட அழகுடன் பொலிவுற்று விளங்கும் இராணியே நீ!

கேள்வி கேட்க விரும்பும் பலர், திருட்டுத்தனமாக, உனது காலி முற்

றத்தின் வழியே நுழைந்து, உனது ஒளியற்ற இல்லத்தில் அலைந்தலைந்து, தெளிவுடன் பதில் வருமா என்று தயங்கி நிற்கிறார்கள்.

காணமுடியாத ஜோதியின் கைகளினின்று தெறித்து வந்த இன்ப பாணங்களினின்று. பல இதயங்கள் இன்ப வெறியுடன் பாடிக் கொண்டு, ஆர்வத்துடன் இருளின் அஸ்திவாரத்தையே அசைத்திருக்கிறார்கள்.

இவ்வாறு விழிப்புற்ற ஆன்மாக்கள், அதிசயத்துடன் நட்சத்திரப் பொலிவையே உற்று நோக்கிக் கொண்டு, தாங்கள் உடன் கண்ட அற்புதத்தையே சிந்தித்த வண்ணம் நிற்கிறார்கள்.

ஓ இரவே! இவ்விழிப்புற்ற ஆன்மாக்களைப் பாடும் அதிசயக் கவிஞனாக என்னை ஆக்குவாயாக!

உனது அளப்பரிய மௌனத்தைப் பாடும் அரிய கவிஞனாக என்னை ஆக்குவாயாக!

(21)

என்னுள் மறைந்திருக்கும் அகண்ட வாழ்வை நான் ஒரு நாள் சந்திப்பேன்; என்னுள் மர்மமாக மலரும் பேரின்பத்தையும் நான் ஒரு நாள் கண்டு இன்புறுவேன்; ஆனால், எனது வாழ்க்கையில், பல நாட்களில், சோம்பல் நிறைந்த மண் எனது பாதையில் வந்து குறுக்கிட்டு என் மனதைக் குழப்பிவிடலாம்.

பேரின்பத்தின் ஒளியைக் கொஞ்சம் கொஞ்சமாக நான் அறிந்து உணர்ந்து வருகிறேன்; பேரின்பக் காற்று என்மேல் அலையலையாக வந்து மோதி மறைகிறது; இதை யனுபவிக்கும்போது, எனது எண்ணங்கள் மணம் வீசுகின்றன.

எனக்கு வெளியேயுள்ள இன்பத்தையும் நான் ஒரு நாள் சந்திப்பேன்; ஒளித் திரையின் பின்னால், இந்த இன்பம் நிகழ்கிறது; கரை மீறிப் புரளுகின்ற தனிமையில், இந்த நிகரற்ற இன்பம் நின்று நிலவுவது திண்ணம்; தனிமையின் வெள்ளத்தில், இறைவனின் சிருஷ்டிப் பொருள்கள் யாவும், இறைவன்

திருஷ்டியில் அமைந்திருப்பதுபோல, காட்சியளிக்கின்றன.

(22)

இலையுதிர் காலத்தில், காலையில் ஒளி அதிகமாகவே வீசி வருகிறது; உனது பாடல்கள் சஞ்சலத்தில் மூழ்கி, விட்டு விட்டு வெளிவருவதால், உனது புல்லாங்குழலை என்னிடம் கொஞ்சநேரம் தந்து உதவுவாயாக.

என் மனநிலையை ஒட்டியே, நான் அதில் பாடி விளையாடுவேன்—அதை எனது தொடையில் கொஞ்ச நேரம் வைத்திருப்பேன், அதன்பின் என் உதடுகளில் வைத்து வாசிப்பேன், அதன்பின் என் பக்கத்தில் புல்லின் மேல் வைத்திருப்பேன். அமைதியான அந்தி மாலையில், நான் பூக் கொய்து, மாலை கட்டி அந்தப் புல்லாங்குழலுக்குச் சூட்டி அலங்கரிப்பேன்; அதில் மணம் நிறையச் செய்வேன்; விளக்கேற்றி, அந்தக் குழலை வணங்கி நிற்பேன்.

இரவில் மீண்டும் உன்னிடம் வந்து, உனது புல்லாங்குழலைத் திரும்பத் தந்துவிடுவேன்.

நட்சத்திரங்களின் இடையே, பிறைச் சந்திரன் தனிமையில் துணையற்று அலைந்து கொண்டிருக்கும்போது, நள்ளிரவுக்குரிய கானத்தை, நீயே அதில் இசைத்து நிற்பாய்!

(23)

கவிஞனின் மனம் மிதந்தே வருகிறது; காற்று வீசும்போதும், தண்ணீர் வரும்போதும், கவிஞனின் மனம், வாழ்க்கையின் அலைகளில் நர்த்தனம் செய்கிறது.

இப்போது சூரியன் அஸ்தமித்து விட்டது; இருண்ட ஆகாசம், கடலின் மேல் பரப்பையே மூடிவிடுகிறது, களைத்த கண்ணின் இதழ்கள் போல, ஆகாசமும் கடலும் கண்மூடி நிற்கின்றன. இது கவிஞனின் மனநிலைக்குப் பொருந்திய அருமையான நேரமல்லவா? கவிஞன் இதே நிமிஷம்தான் எழுதுகோலை எடுத்துவிட்டு, தனது மனதைச் சிந்தனைகளின் ஆழத்தில் தேக்கி, மௌனத்தின் அழியாத இரகசியத்தை அறிந்து அனுபவிக்கும்படியே விட்டு விடுகிறான்.

(24)

இரவு இருண்டது; எனது உயிரில் உனது உறக்கம் ஆழப்பாய்ந்து பரவி விட்டது.

காதலின் துன்பமே! விழிப்பாயாக! கதவை எப்படித் திறந்துகொண்டு வர லாம் என்பது எனக்குப் புலப்பட வில்லை. நான் வெளியே நிற்கிறேன். மணிகள் கால அளவில் காத்திருக்கின் றன; நட்சத்திரங்கள் விழிப்புற்று கவனிக்கின்றன; காற்று அசைவற்று நிற்கிறது; எனது இதயத்தில் மௌனம் மண்டிவிட்டது.

காதலனே, விழிப்பாய், விழிப்பாய்! எனது காலிக் கிண்ணத்தில் பாட்டின் நாதத்தைப் பெய்து, இரவின் வெறுமை யில் சலசலப்பை எழுப்புவாயாக!

(25)

காலைப்பட்சி பாடி வருகிறது. காலை விடியுமுன், உதயத்தின் உண்மையை இந்தப்பட்சி எங்கிருந்து" அறிந்துவிடு கிறது, தெரியுமா? ஒளி வெளியே தலை காட்டுவதற்கு முன் பெரும்பாலான

இருள், தனது குளிர்ந்த இருண்ட சுருள்களில் ஆகாசத்தையே, சூழ்ந்து கொண்டு நிற்பது உண்மையல்லவா?

ஆகாசத்தில் மண்டிக் கிடக்கும் இருட்டையும், இலைக் குவியல்களில் சூழ்ந்து பரவி நிற்கும் இருட்டையும் அற்புதமாகத் தாண்டிக்கொண்டு—ஏ, காலைப் பட்சியே!—உனது கனவில் சூரியன் எவ்வாறு ஒளியைக் காட்டி நின்றான்?

"இரவு மறைந்து, சூரியன் ஒளிவீசப் போகிறான்" என்று நீ விடியுமுன் பாடிய பாட்டை உலகம் நம்பவே இல்லை.

ஏ, உறங்குபவனே, விழிப்புற்று எழுவாய்! சூரியக் கதிரின் முதல் ஆசியைப்பெற, உனது முகத்தைத் திறந்து காட்டுவாய்; காலையில் பாடும் கானப் புள்ளுடன், நீயும் கலந்து பாடுவாயாக! இன்பம் நிறைந்த மனவுறுதியுடன் பாடி வருவாயாக!

(26)

விண்ணில் தாரகைகள் மறைந்தன. என்னுள் கிடக்கும் வறிஞன்,

தனது மெலிந்த கைகளை ஆகாசத்தை நோக்கி விரித்துக்கொண்டு, பசிக் குரலுடன் இரவின் இருண்ட காதில் கதறினன்.

நம்பிக்கை யிழந்த பாலைவன விண்ணிலே சாய்ந்து கிடக்கும் தெய்வம் போல், இடிந்து கிடக்கிறது குருட்டு இருட்டு; இருளின் முன், இந்த ஏழை தனது பிரார்த்தனைகளைச் செய்கிறன்.

காலிக் கூண்டைச் சுற்றிக் கதறி வரும்பட்சிபோல, ஏக்கத்தின் சூன்ய வெளியைச் சுற்றி ஆசைக் குரல் சுழித்தோடியது.

காலையில் சூரியன் கதிர்வீசி பவனி வந்ததும், அந்த வறிஞன் துள்ளிக் குதித்துக்கொண்டு சொல்கிறன்:

"செவிட்டிரவு, தனது கஜானா காலி என்று சொன்னதும் நல்லது தான்; அதுவே எனது பாக்கியம்!"

மேலும் சொன்னன்: "ஓ வாழ்வே! ஓ ஒளியே! உன்னை மதிப்பிடவே முடியாது! இறுதியில் உன்னைக் கண்ட இன்பம், மதிப்பிட முடியாதுதான்!"

(5)

சனுதன், கங்கை நதிக்கரையில் தனது நாள் பூசையை முடித்துக் கொண்டிருந்தான்; அப்போது ஒரு பிராமணன் அங்கு வந்து, "ஐயா நான் ஏழை. எனக்கு உதவி செய் யுங்கள்" என்று கேட்டான்.

சனுதன் பதிலுரைத்தான்: "எனக் குச் சொத்தாவது இருக்கத் திரு வோடு ஒன்று தான். என்னிட மிருந்த பொருள்களையும் நான் முன் னமே பிறருக்குக் கொடுத்து விட்டேன்."

பிராமணன் சொன்னான்: "எனது தெய்வம் சிவன் என் கனவினில் தோன்றி, உன்னிடம் போகும்படியே சொன்னான்."

சனுதனுக்கு உடனே ஞாபகம் வந் தது: ஆற்றங்கரையில், கூழாங்கற் களின் மத்தியில், தான் கண்ட விலை மதிக்க முடியாத மாணிக்கத்தை, வேறு யாருக்கும் கொடுக்கலாம் என்று, மண்ணில் புதைத்து வைத்தி ருந்தான்.

அந்த இடத்தை பிராமணனுக்குக் காட்டினன்; பிராமணன் அதைத் தோண்டி எடுத்தான், ஆச்சரியப் பட்டான். தரையில் உட்கார்ந்து கொண்டு, சூரியன் மறையும் வரை, சிந்தனையில் மூழ்கியிருந்தான்; இடையர்கள், அந்தி வேளையில், ஆடு மாடு களை வீட்டுக்கு ஓட்டிச் சென்றார்கள்.

பின்னர், பிராமணன் எழுந்து, மெதுவாக சனதனிடம் வந்து கேட்டான்: "குருவே! உலகச் செல்வத்தையே வெறுத்துத் தள்ளும் ஆன்மச் செல்வத்தில், ஒரு முந்திரி அளவு எனக்குத் தரலாமா?"

இப்படிச் சொல்லிவிட்டு, அந்த பிராமணன் மாணிக்கத்தை தண்ணீரில் எறிந்துவிட்டான்.

(28)

பல சந்தர்ப்பங்களில், தங்கள் வீட்டுக் கதவண்டை கூப்பிய கரங்களுடன், அது வேண்டும் இது வேண்டும் என்று மேலும் கேட்டிருக்கிறேன்.

சில சமயங்களில் மெதுவாகக் கொஞ்சம் கொஞ்சம் கொடுத்தும்,

சில சமயங்களில் திடீரென்று அள வுக்கு மிஞ்சிக் கொடுத்தும் உதவி யிருக்கிறீர்கள்.

சிலவற்றை எடுத்துக் கொண்டும், சிலவற்றை கீழே நழுவ விட்டும் போயிருக்கிறேன்; சில பொருள்கள், என் கைமேல் கனக்கின்றன; சில வற்றை, நான் விளையாடும் கருவி களாகச் செய்து, அலுத்துப் போன வுடன் உடைத்தெறிந்திருக்கிறேன். உடைந்த பின்னங்களும், உனது கொடைக் குவியல்களும் உன்னையே மறைத்தன; எனது முடிவற்ற ஆர்வ மும் ஆசையும், என் இதயத்தையே தேய்வுறச் செய்தன.

'எடுத்துக் கொள், ஓ எடுத்துக் கொள்' — என்று எனது குரல் ஒலிக்க ஆரம்பித்து விட்டது.

இந்த ஏழையின் திருவோட்டைச் சிதறவடிப்பாயாக; விடாப் பிடியாக கவனிப்பவனின் விளக்கை அணைத்து விடுவாயாக; உனது நன்கொடைக் குவியல்களினின்று என்னை விடுவித்து, உனது தனிமையின் அகண்ட சந்நி தானத்தில் என் கைகளைப் பிடித்து எழுப்பி நிறுத்துவாயாக!

(29)

தோல்வியடைந்தவர்களின் மத்தியில் நீ என்னை நிறுத்தியிருக்கிருய்.

என்ருல் வெற்றிபெற முடியாதென்பதும், விளையாட்டையே விட்டுவிட முடியாதென்பதும் எனக்குத் தெரியும்.

குட்டையில் குதிப்பேன், நீர் நிலையின் ஆழத்தில் அமிழ்ந்தாலும் பாதகமில்லை.

என்னையே அழிக்கும் விளையாட்டையே விளையாடுவேன்.

என்னிடமுள்ளதை யெல்லாம் அழித்துவிடுவேன்; எனது இறுதிப் பைசா தொலையும் வரை யாவற்றையும் இழந்து, இறுதியில் என்னையே, என் உயிரையே பந்தயப் பொருளாக வைத்துச் சோதிப்பேன். இப்படிச் செய்த பின்தான், எனது கொடிய பரிபூர்ண தோல்வியின் மூலம் நான் வெற்றி பெற்றதாக எண்ணுவேன்.

(30)

எனது இதயத்தை நீ கிழிந்த கந்தையில் அலங்கரித்து வீதியில்

பிச்சை யெடுக்க அனுப்பியபோது, ஆகாசத்தில் ஒரு ஆனந்தப் புன்முறுவல் பறந்து சென்றது.

அவள் (இதயம்) வீடுதோறும் அலைந் தலைந்து பிச்சையெடுத்து வரும்போது, பல தடவைகளில் அவள் திருவோடு அனேகமாய் நிரம்பியதும், கொள்ளை யடிக்கப்படுவாள்.

நாள் முழுதும் அலைந்து களைத்து முடிவில் அவள் உன் அரண்மனைக்கு வரும்போது, அவள் திருவோடு காலி யாகப் பரிதாபகரமாகவே இருக்கும்: நீ அவள் கையைப் பிடித்து அழைத்து வந்து, உனது சிம்மாசனத்தின்மேல் உன் அருகே அவளை உட்கார வைப்பாய்.

(31)

ஷிராவாஸ்தியில் பஞ்சம் கொடுமை யாகப் பரவி வரும்போது, புத்த ஞானி தன் சிஷ்யர்களைக் கேட்டார்: "பசியால் வருந்துபவர்களை உணவளித்துக் காப் பாற்றும் கடமையை, உங்களில் யார் ஆற்றத் தயாராக இருக்கிறீர்கள்?"

வட்டித் தொழில் செய்யும் ரத்னகர், தலையைத் தொங்கவிட்டுக்கொண்டு சொன்னர்: "பசியால் வருந்துபவர்களுக்கு உணவளித்துக் காப்பாற்ற, என்னுடைய செல்வமனைத்துமே பற்ருதே, இன்னும் அதிகமான பணமல்லவா வேண்டியதிருக்கும்."

அரசனின் பட்டாளத் தலைவர் சொன்னர்: "நான் என் உயிரையே இரணத் தியாகமாகக் கொடுக்கத் தயாராக இருப்பேன்; ஆனல் என் வீட்டில் போதிய உணவு இல்லையே என்று வருந்துகிறேன்."

பெரும் பண்ணை மிராஸ்தார் தர்மபாலன் சொன்னர் (பெருமூச்சு விட்டுக்கொண்டே): "மழையில்லா வரட்சியினல், எனது நிலங்கள் உலர்ந்துபோய் விட்டன. மன்னனுக்கு நிலவரி எப்படிக் கட்டுவதென்பதே எனக்குப் புரியவில்லை."

பிச்சையெடுத்துப் பிழைக்கும் ஆண்டியின் மகள் சுப்ரியா திடீரென எழுந்தாள். எல்லோருக்கும் வணக்கம் செலுத்திவிட்டு, அமைதியாகக் கருணையுடன் சொன்னள்: "பட்டினி கிடப்ப

வர்களுக்கு நான் உணவளிக்கிறேன்.''
மற்றவர்கள் கேட்டார்கள் : ''உன்னால் இந்தச் சபதத்தை எப்படி நிறைவேற்ற முடியும் ?''

சுப்ரியா உடன் பதிலிறுத்தாள் : ''இங்கு குழுமியிருக்கும் அத்தனை பேர்களிலும், நான் தானே பரம ஏழை. அதைப் பொறுத்துத்தான், என்னுடைய தைரியமும் பலமும். இங்கிருக்கும் அனைவர்களின் இல்லங்களிலும், ஏன் ஒவ்வொரு இல்லத்திலும், என்னுடைய பணப் பெட்டியும் எனது களஞ்சியமும் இருக்கிறது.''

(32)

எனது அரசனை நான் தெரிந்துகொள்ளவே இல்லை; அதனால்தான் அவர் என்னைக் கப்பம் கேட்கும்போது, நான் என்னுடைய கடன்களைக் கொடுக்காமலே ஒளிந்துகொண்டு தலைமறைவாகத் திரியலாமா என்று தைரியம் கொண்டேன்.

எனது பகல் வேலைகளுக்குப் பின்னும், இரவின் கனவுகளுக்குப் பின்னும்

நான் ஓடோடியும் ஒளிந்து மறைந்து கொண்டேன்.

ஆனால், என் வாழ்க்கையின் ஒவ்வொரு மூச்சிலும், அரசன் தன் கப்பத்தை வருந்தி வசூலிக்கவே முயன்ருன்.

பின்னர், அரசன் என்னை நன்கு அறிந்து கொண்டு விட்ட நிலையில், நான் ஓடி ஒளிய எனக்கு இடமே இல்லாமல் போய் விட்டது.

எனக்குள்ள அனைத்தையும் அவர் பாதங்களில் வைத்து வணங்கி, அவர் இராஜ்யத்தில் எனக்கென்றுள்ள இடத்தின் உரிமையை மீண்டும் பெற நான் இப்போது ஆசைப்படுகிறேன்.

(33)

எனது வாழ்க்கையிலிருந்து, மனிதர்கள் வழி படும்படியான ஒரு விக்கிரகத்தை உருவாக்கித் தரமுடியுமா என்று நான் சிந்தித்தபோது, எனது தூசியையும் ஆசைகளையும் வருணம் படிந்த ஏமாற்றங்களையும் கனவுகளையுமே நான் கொண்டு வந்து விட்டேனே, ஐயோ!

நீயே விரும்பும்படியாக, என் வாழ்க்கையினின்று உனது இதயத் துடிப்பையொட்டி ஒரு ஓவிய விக்கிர கத்தையே செய்து தரும்படி நான் உன்னையே கேட்டபோது, நீ உனது அருட்கனையும் ஜீவ சக்தியையும் உண்மையையும், அழகையும் அமைதி யையுமே கொண்டு வந்து விட்டா யல்லவா?

(34)

"அரசர் பெரும! சாது நரோத்த மர், தாங்கள் எழுப்பிய தேவாலயத்திற் குள் புகுந்ததே இல்லை.

அவர் வெட்ட வெளியில், சாலை யோரத்தில், பை மரச் சோலையில் அமர்ந்து ஈஸ்வரனின் திருநாமத்தில் மனம் லயித்துப் பாடிக் கொண்டே யிருக்கிருர்.

அவ்விடத்திற்குப் பொற் கிண்ணத் தில் நிறைத்து வைத்த பூந்தேனை மறந்து, தித்திக்கும் வெண்டாமரைத் தேரலுக்கே மண்டி வந்து மொய்க் கும் சுரும்பினங்களைப் போன்று, பக்த கோடிகள் போய்க் குவிகின்றனர்; ஆதலின் தங்கள் கற்கோயில் அணுகு வாரின்றி விரிச்சுற்றது", எனப் பணிந் தோதினன் பணியாள்.

இதைக் கேட்ட வேந்தன் மனம் வேதனை யுற்றது; அவன் நரோத் தமர் இருக்குமிடத்தை நாடிச் சென்றான். ஆங்கு, புற்றரையில் அமர்ந்திருந்த புனித மூர்த்தியை நோக்கி,

"எந்தையே, சற்குருவே! அடியேன் எழுப்பிய தங்கமணிக் கோபுரம் மேவிய கவினுறு கற்கோயிலினுட் புகுந்து கடவுளைத் தொழாது, ஈண்டு வெறுந் தரையில் வீற்றிருந்து, ஆண்டவ னன்பை அடியார்க்கு உபதேசித்து வருவதன் காரணம் யாதோ, அறியேன்! கூறியருள்க" என்றான் வேந்தன்.

"அரசே! நின் கற்கோயிலில் கடவு ளில்லை, என்பதை அறிந்தே ஈண்டுற் றேம்" என்றார் அமைதியாக நரோத் தமர்.

அரசன் சாதுவை வெகுண்டு நோக்கி, "இருபது லக்ஷம் பொற் காசுகள் செலவிட்டல்லவா, இச்சிற்பச் செல்வம் நிறைந்த அற்புதத் திருக் கோயிலைக் கட்டி ஆண்டவனுக்கு அர்ப் பணித்தேன். இதை அறியீரோ?" என்றான்.

அதைக் கேட்ட சாந்த மூர்த்தி, "வேந்தே! அறிவேன், நின் கோயிலை அர்ப்பணித்த அதே ஆண்டில் அச்சமயமே, நின்குடிகளில் பல்லாயிரக் கணக்கானவர்கள் தீவிபத்தால் தமது வீடுகளை இழந்து, உதவியின்றித் தவித்து நின் வாயிலண்டை வாடி நின்றனர். இந்தப் பஞ்சைச் சகோதரர்களுக்கு உதவியளிக்காத இவன் எனக்குப் பொற்கோவி லெழுப்புகிருனும்!" என்றெழுந்தது, ஆண்டவனின் அருளிச்சை; அப்பனே, அக்காரணம் பற்றியே, நின் கற்கோயிலில் புகாது, இச்சாலையோரமாய் இம்மரத்தடியில் திகழும் வெட்ட வெளியை அவனன்புக் கோயிலாய்க் கொண்டு ஏகாங்கியாய் அமர்ந்தேன்; அதனல் நின் கோயில் புகுவாரற்றுக் காலியாயிற்று. ஆங்கே 'நான் கட்டினேன்' எனும் அகந்தையின் சின்னந்தான் தாண்டவமாடுகிறது," என்ருர் நரோத்தமர்.

இதைக் கேட்ட வேந்தன், சாந்த மூர்த்தியைக் கடிந்தான்; "என் நாட்டை விட்டோடு" என்று கனலுமிழ்ந்தான்.

அதற்கு அம் மகான், அமைதியும் சாந்தமும் எய்திப் புன்முறுவல் பூத்து 'ஆம் இறைவன் இச்சைப்படியாகுக! அரசே எம்மிறைவனை நீவிர் துரத்திய இடத்திற்கே, எம்மையும் விரட்டுக,' என்றார்.

(35)

ஏ, வீரர்காள்! காளமேந்தி வாருங்கள்! அஃது ஏந்துவாரற்றுப் புழுதி தோய்ந்தது. ஆவியின் வீறு தணிந்தது; ஒளி மங்கி இருள் கவிந்தது. அந்தோ, தீய காலம்!

தீரர்களே! எடுங்கள் கொடிகளை; முழக்குங்கள் போர்ப் பாடல்களை; புரியுங்கள் யுத்த நாதம்!

வாழ்க்கைப் பிரயாணிகளே! உங்கள் பயணத்தை விசையுறுத்துங்கள். வீரச் சின்னங்களான கொம்புகளும், காளங்களும் அந்தோ! தேடுவாரற்றுப் புழுதி தோய்ந்ததைப் பார்மின்!

உலகீர்! நான் நாளெலாம் உழைத்தலுத்த பின் தனிமையில் இனிமை காண்பதற்காக, மாலைக்காணிக்கையுடன் வாழ்வுப் பாதையில் என் ஆன்மக் கோயில் நோக்கிச் சென்று கொண்டிருக்கிறேன்.

இறைவா! என் மனப் புண்களை மாற்றி, மாசறுத்து எனைத் தூய்மை யாக்குவாய் என எண்ணியே உன்னிடம் வந்தேன். ஆனால் இதோ! உன் வெற்றிச் சின்னம் வீணை புழுதியில் தோய்ந்து கிடப்பதைக்கண்டு மனமுடைந்தேன்.

முதல்வா! இரவு கவியுமுன் அந்தியில் விளக்கேற்றுதல் மரபு; ஆதலின், என் வாழ் நாளின் அந்தி விளக்கை ஏற்ற இது தருணமல்லவா? இரவு, நக்ஷத்திரங்களுக்குத் தாலாட்டவில்லையா? செங்குருதியை வென்ற செவ்விய ரோஜாவின் வடிவுடைய திருமுகத்தேவ! என் கண்கள், உறக்கமிழந்தன; மூப்பால் தளர்வுற்றேன்.

இறைவா! நான் ஓடியாடிச் சலசலத்த என் வாழ்வின் யாத்திரை, முற்றிற்று என நினைத்தேன்; என் இறுதிக்கடனை உனக்குச் செய்து முடித்தேன் எனக் கருதினேன். ஆனால் இவ்வாழ்வின் யாத்திரை இன்னும் முடிந்திலது, நின் வெற்றிக்காளம் புழுதி தோய்ந்தபடியே உறங்குகிறது.

இறைவா! என் விண்ணப்பத்தைக் கேள்: என் தளர்ந்த உள்ளத்தை, இளமை எனும் நின்மோகன சக்தியால் வலிவுறுத்து.

இந்த ஜடவாழ்வில் உன்னைச் சிறிதேனும் அகலாத நித்தியானந்தக் களிப்பைத் தந்தருள்! என் உள்ளத்தில் கவிந்துள்ள பேரிருளை அகற்று; அச்சத்தைப் போக்கு; ஆண்மையைத் தா! நின் பெருங்கருணைச் சிலிர்ப்பில், என்னைத் திளைக்கச் செய்து, ஆனந்தக் களிப்புறுத்து. நின் வெற்றிச் சின்னத்தை வீறுடன் ஏந்தச் செய். அவ்வாருயின்,

இறைவ! நீளுறக்கம் நீங்குவேன்; அம்புகள் பொழியினும் அதனூடே விரைவேன். வாழ்வுப் பாதையில் வந்துறும் இடர்களைக் கண்டஞ்சேன்.

உலகீர்! உங்களில் சிலரேனும் வீட்டை விடுத்து, என்னுடன் வருக; என்னுடன் இணைக. சுகபோகிகள் அழுதே செல்லட்டும்; கொடிய கனவுகளில் கலங்கிக் கதறட்டும். எவ்வாருயினும் இன்று நாம் இறைவனது

வெற்றிச் சின்னத்தை எடுத்து முழக்கியே தீரவேண்டும்; தாவி வருக!

இறைவா! இதுகாறும் நின்முன், சாந்தியைத் தந்தருள் என இறைஞ்சினேன்; அதற்காக இப்போது வெட்குகிறேன். நான் இப்போது நின் திருமுன் நிற்பது, அமைதியைக் கேட்கவா? இல்லை, இல்லை, ஆன்மத் திண்மையெனும் கவசத்தை எனக்குப் போர்த்தியருள் எனப் புகலவே வந்தேன்!

இன்னலும் இடரும் வாழ்வில் மோதி, என் உள்ளத்தில் உறுதிக் கனலேற்றுக! நின் பெருங் கருணைத் திறனை, என் உள்ளப் பறை உலகெலாம் ஒலித்துப் பரவுக. என் கரங்கள், வேறொன்றையும் ஏந்தாது, நின் வெற்றி முரசையே முழக்குக!

(36)

ஏ, என் சௌந்தரிய சக்தியே! அன்னையே! நின்னை அறியாப் பித்தர்கள் மூடபக்தியால் நின் திருமேனியின் மெல்லங்கியை அழுக்குறுத்தினர். இதனால் என்னுளம் நொந்து புண்ணானது.

இரவெலாம் கண்ணயராத களியாட்டத்தில் தோய்ந்த அவர்களது செவ்வரிக் கண்களில், காலை வெய்யில் அடித்தது. அல்லிபூத்த வெண் தடாகத்தின் மெல்லிய பூங்காற்று, அவர்களது தணலெழும் மூச்சிற்கு முகமன் கூறி, தண்மையாக்கியது. பேரிருளின் ஆழத்திலிருந்து கொண்டு, நக்ஷத்திரங்கள் அந்த வெறியர்களை ஊடுருவி நோக்குகின்றன. ஆனால் இன்னும் அவர்களது உறக்க மயக்கம் கலைந்திலது. அதனால், "சாமுண்டி, தாயே! நின் தண்டச் செங்கோலேந்தி இவ்வறிவிலிகளைத் திருத்தி, நீதியருள்" என நின்னிடம் விண்ணப்பித்தேன்.

அன்னையே! நின் நியாயத் தீர்ப்பின் அரியணை யானது, பூஞ்சோலையிலும், வஸந்த காலப் புள்ளிசையிலும், ஆற்றலையின் இசையொலிக்கு அமைதியுடன் ஒத்திசைக்கும் மரக் கூட்டங்களின் நிழல் கவிந்த நதிக்கரைகளிலும் அல்லவா உள்ளது!

அன்பரசியே! அம்மூட பக்தியினர் நின்னிடம் வைத்த காதல்பித்து கருணை

யற்றது. தத்தம் விருப்பின்படி நின்னிடம் அவர்கள் தமது இச்சையையே ஜோடித்துப் பார்க்கக் கருதி, நின் ஆபரணுதிகளைப் பறித்து, இரவில் பதுக்குகின்றனர். என்னே அறியாமை!

அம்மா! இவர்கள் உன்னை உருக்கி வார்த்து உருவாக்கி நின் பூமேனியைப் புண்ணுறுத்தியபோது. அவ்வடு, என்னுள்ளத்தே பளிச்செனப் பாய்ந்து ஊடுருவியது. உடனே மனம்பொருது நின்னிடம், "அன்பமுதே! நீ நின் வாளேந்தி அவர்களுக்கு நீதியருள்" எனக் கதறினேன்! செவி சாய்த்தாய்!

ஆ! நின் கருணைத் திறத்தை என்னென்பேன்! அஃது எஞ்சா விழிப்புற்றது. நீ அவர்களது நிந்தனைகளைப் பொருட்படுத்தாது, ஓர் தாயினது கருணைக் கண்ணீரை உகுத்தாய். அம்மையே நின் மாருத பேரன்புக் காதல் அவர்களது நிந்தா ஸ்துதிகளை ஏற்றுத் தனது மனப் புண்ணிலேயே மறைத்தது.

தாயே! நின் நியாயத் தீர்ப்பின் நடு நிலையானது, அயரா அன்பின் இன்னலமைதியிலும், கற்பின் நாணக் குறு நகையிலும், இரவெலாம் திக்கற்ருேர் அழுங்கும் தீனக் குரலிலும், கருணை யெனும் விடியற்கால ஒளியிலும் அல்லவா உள்ளது!

ஏ, சாமுண்டி! பயங்கரீ, அவ்வறியா மூடபக்தியினர், கட்டற்ற பேராசையால் இரவில் நின் வாயிற் கதவுகளில் ஏறித் தாவினர்; நின் உக்கிராணத்தையே உடைத்து உட்புகுந்து, உன் அணி கலன்களைக் கொள்ளையிடலாயினர். அக் கொள்ளைப் பொருள், எளிதில் நகர்த்தவும், அகற்றவும் இயலாதவாறு அவ்வளவு பளுவாயிருந்தது. இதையறிந்த நான், நின்னிடம், "ஏ, பயங்கரீ! நீ அவர்தம் அறியாமையை மன்னித்துக் காத்தருள்" எனக் கரைந்துருகி வேண்டி நின்றேன்.

தாயே! நின் கருணரசம், புயலென வெடித்துப் பொழிந்தது! அவர்களைக் கீழே வீழ்த்தியது; சூறைப் பொருள்கள் சிதறிப் புழுதி படிந்தன.

அம்மே! நின் கருணைக் கடாக்ஷத்தை, திண்ணிய பேரிடி முழக்கில், செங் குருதிப் பொழிவில், சூர்யாஸ்தமனக் கொவ்வைக் கோபாக்கினியில் அன்றோ கண்டேன்!

(37)

புத்தரின் சிஷ்யன் உபகுப்தர், மதுரா புரியின் மதில் சுவரின் பக்கமாய், மண்ணில் படுத்து உறங்கிவிட்டார்.

விளக்குகள் அணைந்துவிட்டன; கதவுகள் சாத்தப்பட்டன. ஆடி மாதத்தில் மந்தாரமிட்ட ஆகாசத்தில், நட்சத்திரங்கள் மறைந்திருந்தன.

திடீரென்று அவன் நெஞ்சைத் தொட்டு, பாதச்சலங்கையுடன் ஒலித்துக் கொண்டு நடந்து வந்த பெண் யார்?

உபகுப்தர் திடீரென்று அதிர்ச்சியுடன் எழுந்தார்; அவருடைய மன்னிக்கும் கண்களில், ஒரு பாதின் விளக்கொளி தைத்தது.

அவள் நடனம் ஆடும் தாசிப் பெண்: நகை வரிசைகள், அவள் உடலை நட்சத்திரங்கள் போல மின்னி அலங்கரித்தன.

அவள் உடலில் வெளிரிய நீலச் சல்லாத்துணி, மேகம் போல மூடிப் படர்ந்திருந்தது; அவள் உடம்பெல் லாம், இளமை வெறி பூரித்திருந்தது.

அவள் தனது விளக்கைக் கீழே தாழ்த்தி, உபகுப்தரின் இளமை ததும்பும் முகத்தை உற்று நோக்கி, அவனுடைய உண்மையான அழகையும் கண்டு திகைத்துப்போனாள்.

" இளந்துறவியே, என்னை மன்னிப் பீர்களாக! அன்புடன் எங்கள் இல் லத்துக்கு வாருங்கள். இந்த வீதிப் புழுதியில் தாங்கள் படுத்து உறங்குவது சரியல்லவே!'' என்றாள், தாசிப் பெண்.

துறவி பதில் சொன்னார்: " மாதே! நீ வீதி நெடுகவே போகலாம். காலம் கனியும் போது, நான் உன்னிடம் வருவேன்!''

திடீரென்று, இருண்ட இரவில் மின்னல் சீறிக்கொண்டு பாய்ந்தது.

விண்ணினின்று, ஒரு மூலையில் புயல் உறுமியது; அந்தப் பெண் பயந்து நடு நடுங்கினாள்.

போகும் பாதையில் உள்ள மரக்கிளை களில், மலர்கள் வெடிக்க ஆரம்பித்தன.

நீண்ட தூரத்தில் வெப்பமான வசந்தக்காற்றின் அலைகளில் புல்லாங் குழலின் இசை அருவி, இன்பமாய் மிதந்து வந்து கொண்டிருந்தது.

அந்த ஊர் ஜனங்கள், பூச்சொரியும் திருவிழாவுக்காக காட்டுக்குச் சென்று விட்டனர்.

விண்ணின் மையத்திலிருந்து பூர்ண சந்திரன், மௌனத்தில் ஆழ்ந்திருக்கும் நிசப்தமான நகரின் நிழல்களின்மேல், தனது வெள்ளிக் கிரணங்களை வாரி இறைத்துக்கொண்டிருந்தான்.

இளந்துறவி, தன்னந்தனியே அந்த நிசப்தமான வீதியில் நடந்துகொண்டே போனான்; அவன் தலைக்கு மேல், காதல் நோய் கொண்டு கலங்கி நிற்கும் கோகுலப்புட்கள், மாமரக் கிளைகளில்

உட்கார்ந்து கொண்டு, உறக்கமற்ற காதற் கீதத்தையே பாட ஆரம்பித்து விட்டன. உபகுப்தர், பட்டண வாசற் கதவுகளைத் தாண்டிச்சென்று கோட்டை மதில் அடிவாரத்தில் நின்று கொண்டிருந்தார்.

அவர் காலடியில், சுவரின் நிழலில் நிற்கும் பெண் யார்? இருண்ட தொத்து நோயால் பீடிக்கப்பட்டு, அவசரமாகப் பட்டணத்திலிருந்து துரத்தப்பட்டு, கொடிய புண் நிறைந்த பெண்ணுகைத் தோற்றமளிக்கும் உருவம் யார்?

துறவி அவள் பக்கத்தில் உட்கார்ந்தார், அவளுடைய தலையைத் தன் முழந்தாள்களில் அணைத்தார். அவளுடைய காய்ந்த உதடுகளில் தண்ணீர் விட்டு நனைத்தார். அவளுடைய உடம்பிலும் ஔஷதம் போன்ற தைலம் தடவினார்.

"ஐயா, கருணையுள்ளமே! நீங்கள் யார்?" என்று அந்த தாசிப் பெண் கேட்டாள்.

'இறுதியில் நான் உன்னிடம் வர வேண்டிய காலம் வந்து விட்டது,

அதனுல்தான் நான் இங்கு வந்திருக்கிறேன்" என்ருர் இளந்துறவி.

(38)

காதலரே! நமக்குள் இனிமேல் வீண் ஊடல் பேச்சு இராது.

பற்பல இரவுகளில், அடிக்கடி என் மேல் புயல் குமுறித் தொடர்ந்து அடித்து, என் விளக்கையும் அணைத்திருக்கிறது; எனது ஆகாசத்திலிருந்து, எல்லா நட்சத்திரங்களையும் விரட்டிவிட்டு, என் நெஞ்சில் பல கொடிய இருண்ட சந்தேகங்களையும் கிளறி விட்டிருக்கிறது.

பற்பல தடவைகளில், நதிக்கரைகள் கட்டுமீறி உடைந்திருக்கின்றன; வெள்ளம் புரண்டு எனது விளைந்த வயலையே அடித்துக் கொண்டு போயிருக்கிறது; கூக்குரலும் கொடிய வேதனை நிறைந்த பேரிரைச்சலும், எனது ஆகாசத்தையே நிர்த்தூளியாக்கி விட்டன.

உனது காதலில், வேதனை இடி உண்டு என்றும், மரணத்தின் உணர்ச்சியற்ற அலட்சியநிலை இல்லை

யென்றும் நான் தெரிந்து கொண்டேன்.

(39)

ஆ, சுவர் வெடிக்கிறது; இறையொளியின் சிரிப்பாகவே, ஒளி உள்ளே வந்து மண்டி விடுகிறது.

வெற்றி, ஓ, ஒளியே!

இரவின் இதயம் பிளந்தது. உனது மின்னும் கத்தியால், சந்தேக முடிச்சையும் தாழ்ந்த ஆசைகளையும் இரண்டாக வெட்டிவிடுவாயாக!

வெற்றியே!

வருக, வருக, இரக்கமற்ற அகண்ட சக்தியே! வருக, வருக, உனது தூய வெண்மை நிறமே பயங்கரமாகவல்லவா தோற்றமளிக்கிறது,

ஓ, ஒளிப்பிழம்பே! நெருப்பின் முன், உனது போர்முரசு ஒலித்துக்கொண்டிருக்கிறது, செந்நிறத் தீவத்தி மேலே சுடர்கிறது; ஜோதிச் சுடரில், மரணமே மடிந்து விடுகிறதல்லவா!

(40)

ஏ, நெருப்பே! எனது சகோதரனே! உனக்கு வெற்றியே, நான் பாடுகிறேன்.

பயங்கரமான சுதந்திரத்தின், ஒளி மண்டிய செந்தீத் தோற்றமே நீ!

நீ, விண்ணில் உனது கரங்களே வீசுகின்றாய்; வீணை நரம்புகளின் மேல், உனது கைவிரல்கள் பாய்ந்து நாத வரிசைகளைத் தடவுகின்றன; உனது நடன கீதம் அழகாயிருக்கிறது.

எனது இறுதி நாட்கள் முடிந்ததும், கதவுகள் திறக்கப்பட்டதும், இந்த எனது தசை மண்டிய கைகளே யும் கால்களையும் நீ எரித்து, நீறாக்கி விடுவாய்.

எனது உடல் சாம்பலாகி உன் னுள் கலந்துவிடும்; உனது கொடிய உணர்ச்சிக் குழப்பச் சுழல்களில், எனது இதயமும் சிக்கிக்கொள்ளும், எனது உயிரான எரியும் கனல், மின் னிக் கொண்டு, உனது ஜோதியில் கலந்து விடும்.

(41)

படகோட்டி, இரவில் கொடிய கடலைத்தாண்டி வெளியே செல்கிறான்.

பாய்மரம் வேதனையால் துடிக்கிறது: புயல்காற்று பாய்மர அகலத்துக்கு நிறைந்து விட்டது.

இரவின் விஷக் கொடுக்கால் தீண்டப்பட்டு, இருண்ட பயத்தால் ஆகாசமே கடலின்மேல் சாய்ந்து விடுகிறது; கண்காணு இருட்டின் மேல், அலைகள் தங்கள் தலைகளை மோதும்படி உராய்கின்றன. ஆனால் படகுக்காரன் கொடிய கடலைத் தாண்டியே வெளியே புறப்பட்டுச் செல்கிறான்.

தோணிக்காரன் வெளியே செல்கிறான்—, எந்தவிதமான மர்மச் சந்திப்புக்கு, என்பது தெரியவில்லை; தனது பாய்மரத்தின் வெண்ணிறத்தால், திடீரென்று இரவே அதிரும்படி படகு ஓட்டிச் செல்கிறான்.

எந்தக் கடற்கரையோரத்தில், விளக்கெரிந்து கொண்டிருக்கும் நிசப்தமான முற்றத்தில், புழுதி மண்ணில் உட்கார்ந்து காத்துக்கொண்டிருக்கும் பெண்ணைக் காண ஆவல் கொண்டு செல்கிறான் என்பதும் தெரியவில்லை!

புயலையும் இருட்டையும் அலட்சியம் செய்து செல்கின்ற படகின் போக்கு, எந்த நோக்கோடு செல்கிறது என்பதும் தெரியவில்லையே!

படகில், ரத்னங்களும் முத்துக்களும் நிறைய இருக்கின்றனவா?

ஆ, இல்லை! படகோட்டியின் கையில், எந்த விலையுயர்ந்த புதையலும் இல்லை; கையில் ஒரு வெள்ளை ரோஜா மலருடன், தோணிக்காரன் இன்பமாய்ப் பாடிக்கொண்டே செல்கிறான்.

எரியும் விளக்கின் முன், இரவில் தன்னந்தனியே அவனுக்காகக் காத்துக் கொண்டிருக்கிற பெண்மணிக்காகவே, அந்த மலரும் அந்த இனிய பாடலும் போலும்!

போகும் பாதையில் ஒதுங்கியிருக்கும் குடிசையில், அவள் வசிக்கிறாள்.

அவளுடைய பின்னுதை கூந்தல் காற்றில் பறந்து வந்து, அவளுடைய கண்களை மறைக்கிறது.

அவளுடைய உடைந்த கதவுகளின் வழியே, புயல் கதறுகிறது, கீச்சிடு

கிறது; அவளுடைய மண் விளக்கின் ஒளி, துடித்துத் துடித்து, சுவர்களின் மேல் நிழல்களை வாரி இறைக்கிறது.

காற்று கதறும்போது, தன்னுடைய பேரையே சொல்லி அழைப்பதாக அவள் உணர்கிறாள்; ஆனால் அவள் பேரே தெரியவில்லையே!

படகோட்டி நீண்ட நேரமாகப் பிரயாணம் செய்திருக்கிறான். விடிவதற்கு முன், அவன் கதவைத் தட்டுவான்.

முரசு முழங்காது, ஒருவரும் அறிந்துகொள்ள முடியாது.

ஒளியால் மாத்திரம் வீடு பொலிவுற்று விளங்கும், புழுதியும் புனிதமாகும், இதயம் இன்பக்கடலாடும்.

படகோட்டி கடற்கரைக்கு வரும்போது, நிசப்தமாக மௌனமாக எல்லாச் சந்தேகங்களும் மறைந்து ஒழிந்து போய்விடும்.

(42)

எனது இம்மண்ணுலக வாழ்க்கையில், குறுகிய ஓடை போன்ற எனது

குறுகிய வாழ்க்கையில், எத்தனையோ வருஷகாலம், எனது உடலாகிய சிறு உயிர்த்துரும்பைத் தொத்திப் பிடித்துக் கொண்டே வாழ்ந்து வருகிறேன்.

அதன் பின் என்ன?

அங்கே உள்ள ஒளியும், அந்த இருளும் ஒன்றுதானு என்பதை நான் இன்னும் அறிந்து கொள்ளவில்லையே! கண்காணு தெய்வமே, சாசுவத சுதந்திரம்: அவரே கருணையில், அன்பில், தாட்சண்ய மில்லாதவர். இருட்டறையில் ஊமையாக நடித்துக்கொண்டு, முத்தெடுப்பதற்காகச் சிப்பியையே நொறுக்கிவிடுவார்.

தொலைந்துபோன நாட்களைப் பற்றி, நீ அழுதுகொண்டும் சிந்தித்துக் கொண்டும் இருக்கிருய், பரிதபிக்கத்தக்க இதயமே!

இனிவரும் நாட்களைப்பற்றி இனிது சிந்தித்து இன்புறுவாயாக!

யாத்ரிகனே! மணி அடிக்கிறது! பாதை பிரியும் இடத்தில் நீ விடை

பெற்றுக்கிளம்புவாயாக! காலம் வந்து விட்டது.

அவர் முகமூடி மீண்டும் விலகும், நீ அவரைச் சந்திப்பாய்!

(43)

மகாத்மா புத்தரின் சின்னத்தின் மேல், பிம்பிசார மன்னன ஒரு ஆலயம் கட்டினன்; வெண் சலவைக் கல்லில், வாழ்த்துக் கூறி எழுந்தது, இந்த அரிய கோவில்.

அங்கே மாலையில், கோவிலில் மலர் சொரிந்து விளக்கேற்றிவர, மன்னன் மாளிகையிலிருந்து அரசரின் பெண் களும், புதுமணப் பெண்மணிகளும் வந்து கூடுவார்கள்.

இராஜகுமாரன் அரசனக வந்தவுடன், தந்தையின் சமயக் கோட்பாட்டுக்கு முரணுக, இரத்த வெறியுடன், அரிய ஆன்மீக தத்துவ நூல்களை நெருப்பில் போட்டுக்கொளுத்த ஏற்பாடு செய்தான்.

இலையுதிர் காலம்—பகல் பொழுது மறைந்தது. அந்தி மாலையில் பூஜை வேளை நெருங்கியது.

இராணியின் பணிப்பெண் ஸ்ரீமதி புத்தரிடம் அதிக பக்தியுடையவள்; புனிதமான நீர் நிலையில் ஸ்நானம் செய்துவிட்டு, தங்கத்தட்டில் ஏற்றிய விளக்குகளுடன், புதிய தூயவெள்ளை மலர்களுடன், அமைதியாக தனது கருவிழிகளை மௌனமாகவே உயர்த்தி இராணியின் முகத்தைப் பார்த்தாள்.

இராணி பயந்து கலங்கித் துடி துடித்தாள்; அவள் பணிப் பெண்ணைப் பார்த்துச் சொன்னாள்: ''மதிகெட்ட பெண்ணே! புத்தர் ஆலயத்திற்கு யார் பூஜை செய்து வணங்க வந்தாலும், அதற்கு அரசன் மரண தண்டனை விதித்திருக்கிறான், என்பது உனக்குத் தெரியாதா, என்ன''

ஸ்ரீமதி இராணிக்கு வணக்கம் செலுத்திவிட்டு, அங்கிருந்து வெளியே வந்துவிட்டாள்; அரசன் மகனுக்கு புதிதாகத் திருமணம் செய்து அழைத்து வந்த மணப்பெண் அமிதாவிடம்போய் நின்றாள்.

அமிதா, தன் தொடையில் தங்கச் சட்டம் பிடித்த முகம்பார்க்கும் கண்ணாடியை

வைத்துக்கொண்டு, தன் நீண்ட கரிய கூந்தலை ஜடை போட்டுக்கொண்டு, தலையில் கூந்தல் வகுடு பிளந்த நெற்றிக்கு, செந்நிறமான அதிர்ஷ்டத் திலகமிட்டுக் கொண்டிருந்தாள்.

ஸ்ரீமதியைப் பார்த்த அமிதாவின் கைகள் நடுநடுங்கின; அவள் பயந்து கூறினாள்: "இந்த நிமிஷமே, இங்கே நில்லாதே, ஓடிவிடு; எனக்கு எவ்வளவு பயங்கரமான ஆபத்தைக் கொண்டுவர இருக்கின்றாய்?"

இராஜகுமாரி சுக்லா, ஜன்னலடியில் உட்கார்ந்துகொண்டு, அஸ்தமன சூரிய ஒளியில் தன்னுடைய நாவல் ஒன்றைப் படித்துக் கொண்டிருந்தாள்.

பூஜைத்தட்டுடன் தோன்றிய ஸ்ரீமதியைக் கண்ட சுக்லா, நடுங்கித் திகைத்தாள்; நாவல் அவள் மடியிலிருந்து கீழே விழுந்தது. ஸ்ரீமதியின் காதில் சுக்லா ரகஸ்யமாகச் சொன்னாள்: "தைரியமுள்ள பெண்மணியே! மரணத்தையே நோக்கி விரைந்தோடாதே!"

ஸ்ரீமதி பலவீடுகள் தாண்டிச் சென்ருள். தன் தலையை கம்பீரமாகத் தூக்கிக்கொண்டு, அவள் கதறினள்: "அரச குடும்பத்தைச் சேர்ந்த பெண்மணிகளே! விரைந்து வாருங்கள்! புத்தரைத் தொழுகின்ற நேரம் வந்துவிட்டது!"

சிலர் கதவுகளைச் சாத்தித் தாளிட்டனர்; சிலர் அவளைத் திட்டித் தீர்த்தனர்.

அரண்மனையின் வெண்கல ஸ்தூபியிலிருந்து, அஸ்தமன சூரியனின் அந்திக்கிரணம் மங்கி மறைந்தது.

வீதி மூலைகளில், ஆழ்ந்த நிழல்கள் தவழ்ந்தன; நகர இரைச்சல்கள் ஓய்ந்தன; சிவன் கோயில் மணி, சாயங்கால பூஜைவேளையைக் குறித்து ஒலித்துக் கொண்டிருந்தது.

இலையுதிர்காலம்; அந்திவேளை; இருட்டு, தெளிந்த ஏரிபோல ஆழ்ந்த தோற்றத்தை அளித்தது; தாரகைகள் ஒளிவீசித் துடித்தன. அரண்மனைப் பூந்தோட்டத்தில் காவற்காரர்கள், மரங்களின் ஊடே புத்தர்

ஆலயத்தில் ஜோதிச் சுடராக மிளிர்கின்ற விளக்கு வரிசைகளைக் கண்டு கலங்கிப் போனார்கள்.

உடனே உருவிய கத்திகளுடன் ஓடோடியும் சென்று, அந்தப் பணிப் பெண்ணைப் பார்த்துக் கேட்டார்கள்: "மரணத்துக்கும் அஞ்சாத மதி கெட்ட பெண்ணே, நீ யார்?"

இனிய குரலில் பதிலிறுத்தாள் ஸ்ரீமதி: "நான்தான் ஸ்ரீமதி: புத்த மகானின் அடியாள், பக்தை."

அடுத்த கணமே, காவலாளிகளின் கத்தி அவள்மேல் பாய்ந்தது; அவள் இதயத்தினின்று இரத்த வெள்ளம் வெளியே பீறிட்டெழுந்து குளிர்ந்த உணர்ச்சியற்ற சலவைக் கல்லின் மேல் சிதறிக் கிடந்தது.

விண்ணில் தாரகைகள் மௌனம் தாங்கி நிற்க, கோவில் வாசற்படியில் பூஜைக்குக் கொண்டுவந்த இறுதி விளக்கின் ஒளியும் சிதறி மாண்டது.

(44)

உன்னையும் என்னையும் மத்தியில் நின்று பிரிக்கும் நாள், தனது இறுதி வணக்கத்தைச் செலுத்தி மறைகிறது.

பகலின்மேல், இரவு தனது முகத் திரையைப் வீசிப் போர்த்திவிடுகிறது; எனது அறையில் எரிகின்ற அந்த ஒரு விளக்கையும்கூட மறைத்து விடுகிறது.

கரிய நிறமுள்ள உனது பணியாள், இரைச்சலின்றி அமைதியாக வருகிறான்; இரவு மறையும் வரை, என்னுடன் நீ மௌனமாக வீற்றிருக்குமாறு, கலியாணத்தில் வைத்த இரத்தினக் கம்பளத்தை எடுத்து விரிக்கிறான்.

(45)

துன்பப் படுக்கையில், எனது இரவு கழிந்தது. எனது கண்கள் களைத்துவிட்டன. எனது இதயம் துன்பச் சுமையால் கனக்கின்றது; விடிந்ததும், காலையில் வருகின்ற இன்ப வெறியைக் காணக்கூடச் சக்தியற்றிருக்கின்றது.

இந்த நிரவாண ஒளியின்மேல், திரையை வீசு; வாழ்க்கையின் வெறியையும் களியாட்டத்தையும், என் பார்வையினின்று விலக்கிவிடு.

உனது மிருதுவான இரவு, தனது ஆழ்ந்த மடிப்புகளில் என்னைப் போர்த்தி மறைக்கட்டும்; உலகப் போராட்ட வெறியினின்று, எனது துன்பத்தைத் திரையிட்டு மறைக்கட்டும்.

(46)

நான் இதுகாறும் அவளிடம் அடைந்திருக்கும் நன்மைகளுக்குக் கைமாறு செய்யும் காலம் போய்விட்டதல்லவா?

அவளது இரவும் விடிந்துவிட்டது; இருளின்பின் ஒளி பிறந்துவிட்டது; நீ அவளை உன் கரங்களிலே எடுத்துக் கொண்டாய்; அவளுக்கு உண்மையில் சேர வேண்டிய எனது நன்றியையும் நன்கொடைகளையும் உன்னிடமே நான் கொண்டு வந்திருக்கிறேன்.

அவளுக்கு நிகழ்ந்த தீமைகளுக்கும் அபசாரங்களுக்கும், மன்னிப்பைக் கோரி நான் உன்னிடமே வந்திருக்கிறேன்.

மலரவேண்டுமென்று அவள் காத்திருந்த, எனது அன்புக் காதல் மலர்ந்து விட்டது; அம்மலர்களையும் தங்கள் பாதக்கமலங்களில் வைத்து வணங்குகிறேன்.

(47)

எனது பழைய கடிதங்கள் சிலவற்றை, அவள் பெட்டியில் ஒளித்து வைத்திருக்கிறதைக் கண்டேன்,—ஞாபகச்சின்னமாக வைத்து விளையாடும் கருவிகள் தானே, அக்கடிதங்களும்.

காலத்தின் கொடிய கொந்தளிக்கும் வெள்ளத்தினின்று, கோழை மனத்துடன் அவள் இந்தச் சிறு கடிதங்களைத் திருடி வைத்துக் கொண்டு சொன்னாள்: "இக்கடிதங்கள், என்னுடையதே, எனக்கே சொந்தம்."

ஐயோ! இக்கடிதங்களுக்கு உரிமை கொண்டாட, இன்று ஒருவரும் இல்லையே! விலை மதிக்க முடியாத இக்கடிதங்களை யாரால் இனி பாதுகாக்க முடியும்; இருந்தாலும், இங்கே அவைகள் மௌனமாகவே இருக்கின்றன.

இந்த உலகத்தில் அவள் ஞாபகம் அழிந்துவிடாமல், காப்பாற்றுவதற்கு இன்னும் அன்பு இல்லாமலில்லை; இவ்வளவு அன்போடு, இவ்வளவு ஜாக்கிரதையாக இந்தக் கடிதங்களையே அவள் காப்பாற்றிய அன்பு எப்படிப் பட்டது, பாருங்கள்?

(48)

எனது ஆதரவற்ற திக்கற்ற பெண்ணே! வாழ்க்கையில், அழகையும் அமைதி நிறைந்த ஒழுங்கையும் கொண்டு வந்து சேர்ப்பாயாக! நீ உயிருடன் இருந்தபோது, எனது இல்லத்தில் அழகையும் ஒழுங்கையும் தந்துதவினையல்லவா?

காலத்தின் புழுதிபடிந்த குப்பையை அறவே கூட்டி எறிந்துவிடு! காலி ஜாடிகளை நிறைத்து கவனிக்காமல் பாழடைந்தவைகளைப் பழுது பார்ப்பாயாக!

கோவிலின் உள்கதவைத் திற, திரியை ஏற்று, இறைவன் சந்நிதியில் நாம் இருவரும் அந்தரங்கமாக மௌனமாக சந்திப்போமாக!

(49)

நரம்பை இழுத்து இசை கூட்டும் போது, தலைவ! துன்பம் தாங்க முடியாத அளவு பெரிதாயிற்று.

உனது கீதத்தை இசைப்பாயாக! நான் அதில் துன்பத்தை மறந்து லயிக்கும்படி இசை கூட்டுவாயாக!

அந்தக் கருணையற்ற நாட்களில் நீ உன் மனதில் என்ன நினைத்திருந்தாய் என்பதை, நான் அழகின் மூலம் உணரும்படி செய்வாயாக!

மங்கும் இரவு தேய்ந்து, என் கதவண்டை தொங்கிக்கொண்டு அலைகிறது; பாடிப்பாடி அவள் செலவு பெற்று மறையட்டும்.

தலைவ! எனது வாழ்க்கையின் நாத நரம்புகளில் உனது இதயக் கொந்தளிப்பையே கொட்டிவிடுவாயாக; விண் மீன்களினின்று வீழ்கின்ற சாகித்யங்கள் போல, உன் இதயப் பெருக்கையே இசை மழையாக வருஷிப்பாயாக!

(50)

ஒரு நிமிஷ மின்னல் விந்தையாகவே, எனது வாழ்வில் உனது சிருஷ்டியின் அகண்டாகாரத்தையே தரிசித்துவிட்டேன்: பல உலகங்கள் தாண்டியும், பல மரணங்களின் மூலம், சிருஷ்டி, தொடர்ந்த சிருஷ்டி மர்மமாக விரிந்தோடுகிறது.

சில நேரம், பொருளற்ற காலக் கருவியாக எனது வாழ்க்கை நிகழ்வதைக் காணும்போது, எனது பயனற்ற நிலைமையைக் கண்டு நான் அழுது கண்ணீர் விடுவதுண்டு; ஆனல், எனது வாழ்க்கை உனது திவ்விய கரங்களில் சுழலும்போது, அதன் மதிப்பே கூடி விடுகிறதென்றும், நிழல்களில் மதிப்பின்றித் தொலைக்கக் கூடியதல்லவென்றும், மதிப்பிடமுடியாத மாணிக்கமாகவே எனது வாழ்க்கை உனது கையில் மின்னுகிறதென்றும் நான் ஆழ்ந்து உணர்கிறேன்.

(51)

ஏதோ ஒருநாள் அந்திவேளையில், வெளிச்சம் மங்கி மறையும்போது, சூரி

யன் அஸ்தமித்து, என்னிடம் இறுதி யில் விடைபெற்றுக்கொள்வான்.

ஆலமரங்களின் அடியில், இடையர் கள் புல்லாங்குழல் வாசிப்பார்கள்; ஆடு மாடுகள் எல்லாம், நதியின் பக்கம் சம வெளியில் புல் மேய்ந்துகொண்டு நிற் கும்; எனது நாட்கள் இருட்டில் மறைந்துவிடும்.

இதுவே எனது பிரார்த்தனை; நான் புறப்படுமுன், பூமாதேவி தன் கரங்களில் அணைத்துக்கொள்ள என்னை ஏன் அழைத்தாள் என்பதை மட்டும் நான் அறிந்துகொள்ள வேண்டும்.

இரவின் அமைதியில், அவள் ஏன் என்னிடம் நட்சத்திரங்களைப் பற்றிப் பேசினாள், அவளுடைய பகல் ஒளி என் சிந்தனைகளையே முத்தமிட்டு ஏன் மல ரச் செய்தன, என்பதும் நான் அறிந்து கொள்ளவேண்டும்.

•

நான் போவதற்கு முன், எனது பாட்டின் இறுதி அடியை மீண்டும்

பாடி இசையின் போக்கை முடிக்கலாமா? உன் முகத்தையும், உன் தலைக்குக் கிரீடமாகக் கட்டிய மாலையையும் பார்க்கும்படியாக, விளக்கை ஏற்றிவைக்கலாமா?

(52)

உலகத்தையே உறங்கவைத்துத் தாலாட்டும் சாகித்யம் யாது?

வாழ்க்கையின் சிகரத்தில் இந்த நாத அலை மோதும்போது, நாம் சிரிக்கிறோமல்லவா? மீண்டும் இந்த நாதச் சிதர் இருட்டில் திரும்பி மறையும்போது, நாம் பயத்தில் உடல் குறுகித் துடிக்கிறோம் அல்லவா?

ஆனால் முடிவற்ற நிரந்தர நாதம் ஓசை நயத்தோடு வரும்போதும், அந்த விளையாட்டு ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறது.

மதிக்கமுடியாத புதையலை உனது உள்ளங்கையில் வைத்து மறைக்கும் போது, எங்களுடைய பொருளை யாரோ திருடன் கொள்ளையடித்து விட்டான் என்று நாங்கள் துடித்துக் கதறுகிறோம்.

ஆனல் உன் மனம்போல் நீ உள்ளங்கையைத் திறந்து மூடினல், இலாபமும் நஷ்டமும் ஒரே நிலைக்கு வந்துவிடுகிறது.

உனது சுயவடிவோடு நீ விளையாடும் போது, நீ அந்த நிமிஷமே இழந்ததை மீண்டும் பெறுகிருய்!

(53)

எனது கண்களாலும் மற்ற அவயவங்களாலும், நான் இந்த உலகை முத்தமிட்டிருக்கிறேன். என் இதயத்தின் ஆழத்தில், இந்த உலகை எண்ணிறந்த மடிப்புகளில் சுற்றிச் சுருட்டி வைத்திருக்கிறேன். பகலையும் இரவையும் எனது சிந்தனை வெள்ளத்தால் நிறைத்து, உலகமும் நானும் ஒன்ருய் வளர்ந்து ஒன்றிவிட்டோம்: — நான் எனது வாழ்க்கையை ஆவலோடு விரும்பும் காரணம் தெரியுமா?

விண்ணெளி என்னுள் நெய்யப்பட்டு ஆகாசம் பொழிகின்ற ஒளியையே கண்டு நான் ஆசைப்படுகிறேன்!

இவ்வுலகைத் தொடுவதும் விடுவதும் ஒரே மாதிரி உண்மையானல், வாழ்வில் நிகழ்கின்ற சந்திப்புக்கும் பிரிவுக்கும் ஒரு ஆழ்ந்த பொருள் இருந்தே தீரவேண்டுமல்லவா?

மரணத்தில் அன்புக் காதல் ஏமாற்றமடைந்தால், இந்தக் கொடிய ஏமாற்றம், ஒரு தீய புழுவைப்போல, சகல பொருள்களிலும் உட்புகுந்து நாசம் செய்து விடுமல்லவா? நட்சத்திரங்கள் கூட சுருங்கி இருண்டுவிடுமல்லவா?

(54)

மேகம் என்னிடம் சொன்னது: "நான் மறைகிறேன்." இரவு சொன்னது: "கொடிய அருணோதயத்தில், நான் மூழ்கி மறைந்து விடுகிறேன்."

துன்பம் சொன்னது: "இரவின் பாதரேகையாக, நான் ஆழ்ந்த மௌனத்தில் அமுங்கி விடுவேன்."

எனது உயிர் என்னிடம் சொன்னது: "முழுமையில் நான் மூழ்கி மறைகிறேன்."

பூமி சொன்னது: "எனது ஒளிக் கதிர்கள், ஒவ்வொரு நிமிஷமும், உனது சிந்தனைகளையே முத்தமிடுகின்றன."

காதல் சொன்னது: "நாட்கள் ஓடி மறைகின்றன, நான் உனக்காகவே காத்திருக்கிறேன்."

மரணம் சொன்னது: "கடலையே தாண்டி, உனது வாழ்க்கைத் தோணியைச் செலுத்துகிறேன்."

(55)

பிரேதங்களை எரிக்கும் சுடலையில், அந்தத் தனியிடத்தில், கங்கை நதியோரத்தில், கவிஞர் துளசிதாஸ் அலைந்து திரிந்தார்.

தனது இறந்த கணவனின் பிரேதத்தின் காலடியில், ஒரு பெண் திருமணத்திற்கு அலங்கரிப்பதுபோல தன்னை அழகிய ஆடையில் அலங்கரித்துக்கொண்டு உட்கார்ந்து இருப்பதை, கவிஞர் பார்த்தார்.

அவரைக்கண்டதும் அவள் எழுந்திருந்தாள், அவருக்கு வணக்கம் செலுத்

தினாள்; அதன்பின் சொன்னாள்: "குருவே தங்கள் ஆசீர்வாதத்துடன், நான் என் கணவனோடு சொர்க்கம் செல்லுவதற்கு அனுமதி கொடுங்கள்."

துளசி தாஸர் பதில் சொன்னார்: "ஐயோ, என் மகளே, ஏன் இவ்வளவு அவசரம்? இந்த உலகமும் அருமையான இடம்தானே? சொர்க்கத்தை ஆக்கிய ஈசன்தானே இந்த உலகையும் படைத்தான்?"

உடனே அந்தப் பெண் சொன்னாள்: "நான் சொர்க்கத்துக்கே ஆசைப்படவில்லை. எனக்கு வேண்டியது என் கணவன்தான்."

துளசிதாஸர் சிரித்துக்கொண்டே சொன்னார்: "எனது அருமைக் குழந்தையே, நீ வீடு திரும்பிச் செல், இந்த மாதம் முடிவதற்குள், நீ உன் கணவனைக் காண்பாய்."

அந்தப் பெண் சந்தோஷமான நம்பிக்கையுடன் வீடு திரும்பினாள். தினசரி, துளசிதாஸர் அவளுடைய இல்லம் சென்று, உயர்ந்த கருத்துக்களைக்

கொடுத்து சிந்திக்கும்படி செய்து விட்டார். இதன் காரணமாக அவள் நெஞ்சில், தெய்வக் காதல் நிறைந்தது.

மாதம் முடியும் தருவாயில், அவள் அண்டை வீட்டுக்காரர்கள் வந்து அவளைக் கேட்டார்கள் : "பெண்ணே! உனது கணவனைக் கண்டுவிட்டாயா?

அந்த விதந்து சிரித்துக் கொண்டே சொன்னாள் : "நான் எனது நாயகனைக் கண்டுவிட்டேன்."

ஆவலாக அவர்கள் கேட்டார்கள், "எங்கே அவர், உனது கணவன்?"

அவள் பதிலிறுத்தாள் : "எனது நாயகன், இறைவன் என் நெஞ்சில் உறைகின்றான், என்னுள் ஒன்றி விட்டான்."

(56)

என் பக்கம் நீ ஒரு நிமிஷம் வந்து தங்கினாய்; சிருஷ்டியின் இதயத்தில் உறங்கும் பெண்மையெனும் அகண்ட இரகஸியத்தால், என்னையே தொட்டு விட்டாய்.

இறைவன் அளிக்கும் அன்பு வெள்ளத்தை இனிமையாகவே ஈசனிடம் திரும்பத் தருகிறாள் அவள்; இயற்கையில் பொலிவுற்று விளங்கும் புதிய புதிய சௌந்தரியமும் இளமை வளமும் அவளேயாவாள்; குமிழியிடும் ஓடைகளில் அவள் குதித்தாடுகிறாள், காலைக் கதிரில் இன்பமாய்ப் பாடுகிறாள்; கொந்தளிக்கும் அலைகளால், பூமியின் வரட்சியைத் தணிக்கிறாள்; அந்த அழியாப் பரம்பொருள், இன்ப வெறியில், அன்பினின்று வெளியாகும் சோகப் புரட்சியில் அவளிடம் இரண்டாக வெடித்து இன்பக் காட்சியளிக்கிறது.

(57)

என்றும் அநாதியாக, என் இதயத்தில் உறைபவள் யார்?

நான் அவளைக் காதலிக்க முயன்றேன்; ஆனால் அவளை யடைய முடியாமல் தோற்றேன்.

நான் அவளை மலர் - மாலைகளால் அலங்கரித்தேன், அவளையும் புகழ்ந்து பாடினேன்.

ஒரு கணம், அவள் முகப் பொலிவில், ஒரு முறுவல் மின்னிற்று, அதன் பின் மங்கி மறைந்தது.

சோகத்தில் ஆழ்ந்த அந்தப் பெண் கதறினுள்: "உன்னிடம் எனக்கு இன்ப மில்லை."

நான் அவளுக்காக இரத்னம் இழைத்த காப்புகள் வாங்கினேன்; இரத்னம் இழைத்த விசிறி வாங்கி அவளுக்கு விசிறினேன்; அவளுக்காகத் தங்கக் கட்டில் செய்து படுக்கை அமைத்தேன்.

அவள் கண்களில், சந்தோஷ ரேகை துடித்தது. துன்பத்தில் மூழ்கியே அந்தப்பெண் சொன்னுள்: "இவைகளில், இந்தப் பொருள்களில், எனக்கு இன்பமே இல்லை."

அவளை வெற்றிப் பல்லக்கில் உட்காரவைத்து, உலக முழுதும் சுற்றிக் காட்டினேன்.

அடிமைப்பட்ட இதயங்கள், அவள் காலடியில் வணங்கினுர்கள்; வெற்றி முழக்கம், விண்ணைப் பிளந்தது.

அவள் கண்களில், ஒரு கணம், வெற்றிப் பெருமை மின்னியது; அதன் பின்,

கண்ணீர்த்துளிகளில் மங்கியே போய் விட்டது.

சோகத்தில் மூழ்கிய அந்தப் பெண் கதறினுள், "பிற நாடுகளைப் பிடித்து அடிமையாக்குவதில், எனக்கு இன்பமில்லை."

நான் அவளைக் கேட்டேன்: "நீ யாரைத் தேடுகிருய் என்று எனக்குச் சொல்வாயா?"

அவள் சொன்னுள், "பேரிலாத அந்த ஒருவனையே நான் தேடிக் காத்து நிற்கின்றேன்."

நாட்கள் ஓடிமறைகின்றன; அவள் சொல்கிருள், "நான் இதுவரை அறியாத, இனி எனக்கு அறிமுகப்படுத்தப் படும் அந்தக் காதலன், அந்த நாயகன் என்று என்னிடம் வருவாரோ?"

(58)

இருட்டிலிருந்து வெடித்து வருவதும் உனது ஒளிதான்; போராட்டத்தின் நடுவிலிருந்து கிளைத்து முளைத்து வெளி வருவதும், உனது நல்ல செயலும் நன்மையும்தான்.

உலகத்தை வெளியே எட்டிப் பார்ப்பதும் உனது இல்லம் தான்; போர் முரசத்தால் அழைப்பதும் உனது அன்புக் காதல் தான்.

உலகத்தில் சகலத்தையும் இழந்த பின்னும், எஞ்சி நிற்பதும் லாபகரமானதும் உனது இனிய நன்கொடைதான்; மரணக் குகைகளின் வழியே ஓடோடியும் செல்வது உனது உயிரோவியம்தான்.

சர்வ சாதாரணமாக, புழுதியில் கிடப்பதும் உனது சொர்க்கம்தான்; எனக்காகவே நீ அங்கே நிற்கின்ருய், ஏன் எல்லோருக்குமாகவே, நீ அங்கு தவழ்கின்ருய்.

(59)

வீதியில் நான் நடந்து களைப்புற்றிருக்கும்போதும், கொடிய வெயிலில் எனக்கு தண்ணீர் தாக மெடுக்கும் போதும், அந்தி மாலையில் மங்கிய சூரியக் கதிர்கள் நிழல்களை என் வாழ்க்கையில் *அள்ளி வீசும்போதும்,

எனது நண்பனே!

அந்த நிமிஷமே, உனது குரலைக் கேட்க நான் கதறுவதில்லை, ஆனால் உன்னைத் தீண்டி ஸ்பரிசிக்கவே அவாவுகிறேன்.

எனது மார்பில் மறைந்து கிடக்கும் செல்வச் சுமையை உன்னிடம் தந்து விட வில்லையே, என்று என் இதயம் துன்ப வேதனையில் துடித்துக் கொண்டிருக்கிறது.

இரவில் உனது கையை வெளியே நீட்டிக் காட்டுவாயாக! நான் அதைப் பிடித்து வைத்துக்கொண்டு இன்புறுவேனாக! எனது நீண்டு குறுகிச் செல்லும் தனிமை வெளியில், உனது கரத்தின் ஸ்பரிசத்தை அனுபவித்து உணர்வேனாக!

(60)

மொட்டில் உறங்கும் மணம் கதறுகிறது: "ஐயோ! நல்ல நாள் போகிறதே, வசந்தத்தின் இன்ப நாள் மறைகிறதே, நான் இன்னும் இதழ்களினிடையே சிறைப்பட்டுக் கைதியாகவே இருக்கிறேனே!"

மணமே! ஏன் ஏக்கத்துடன், தைரியத்தைக் கைவிட வேண்டும்? உனது சிறைப் பந்தங்கள் உடைந்துவிடும், மொட்டாயிருக்கும் நீ இன்பமாய் மலராகவே மலர்ந்து விடலாம்; நிறைவாழ்க்கையில் நீ சாகும்போதும், வசந்தம் நின்று நிலவுமல்லவா!

மணம், இதயத் துடிப்புடன் மொட்டினின்று கதறுகிறது: "ஐயோ, பரிதாபம்! மணிகள் ஓடி மறைகின்றனவே, இன்னும் நான் எங்கு போகிறேன், எதைத் தேடிப் போகிறேன், என்று இன்னும் எனக்குப் புரியவில்லையே!"

மணமே! ஏக்கத்துக்கு இடம் கொடாமல் தைரியமாயிரு!

வசந்தத்தின் இளங்காற்று, உனது ஆசையை எங்கிருந்தோ கேட்டு அறிந்து கொண்டு விட்டது; உனது வாழ்க்கை மலர்ந்து மணம் வீசுவதற்கு முன், அந்த நாள் மறைந்துவிடாது.

அவளுடைய வருங்காலம் இருண்டது; மணம் நெஞ்சிழந்து சோக வெறியில் கதறுகிறது: "ஐயோ! என் நிலைமை மிக மிகப் பரிதாபம். யாருடைய

பிழையால், எனது வாழ்க்கை இப்படிப் பொருளற்றுப் போயிற்று? நான் இங்கு ஏன் உயிர் வாழ்கிறேன் என்று யாராவது எனக்கு விளக்க முடியுமா?''

மணமே! ஏக்கத்துக்கு இடம் கொடாமல் தைரியமாயிரு!

பரிபூரண அருளோதயம் விரைவில் நெருங்கி வருகிறது; அந்த நேரம், உனது ஆன்மா அகண்ட சைதன்யத்தில் ஒன்றிக் கலந்து மறைந்து, உனது வாழ்க்கையின் பொருளை உண்மையாகவே விளக்க முன் வந்துவிடும்!

(61)

எனது பிரபுவே!

அவள் இன்னும் ஒரு குழந்தைதான். உனது அரண்மனையைச் சுற்றி ஓடி விளையாடுகிறாள்; உன்னையே ஒரு விளையாட்டுக் கருவியாக ஆக்க முயல்கின்றாள்.

அவள் கூந்தல் கலைந்து கீழே விழுந்து புரள்வதையோ, அல்லது அவள் ஆடை புழுதியில் இழுபடுவதையோ அவள் கவனிக்கவேயில்லை.

நீ அவளோடு பேசும்போது, அவள் உறங்கி விழுகிருள். பதிலே சொல்வதில்லை — நீ காலையில் அவளிடம் கொடுக்கும் மலர், கை நழுவி கீழே மண்ணில் விழுகிறது.

புயல் குமுறி வெடிக்கும் போதும், விண்ணில் இருள் மண்டிப் பரவும் போதும், அவள் தூங்காமல் விழித்துக் கொண்டேயிருக்கிருள். அவளுடைய பொம்மைகள் மண்ணில் சிதறிக் கிடக்கின்றன ; நெஞ்சில் பயம் வந்துவிட்டால், அவள் உன்னையே தழுவிக் கொள்கிருள்.

உனக்குச் செய்யும் தொண்டில் ஒரு வேளை தவறிவிட நேரிடுமோ என்று அஞ்சிக் கவலைப்படுகிருள்.

அவள் விளையாடும்போது, நீ புன்முறுவலுடன் அவள் ஆட்டத்தைக் கவனிக்கிருய்.

நீ அவளை நன்கு அறிவாய்.

புழுதியில் உட்கார்ந்து கொண்டிருக்கும் குழந்தையே, உனது திருமணப் பெண் ; அவள் விளையாட்டு நின்றவுடன், அதுவே காதலாக முற்றிவிடும்.

(62)

ஓ, சூரியனே ! அங்கே உனது வடிவத்தைத் தாங்கி நிற்பது எது? அது தானே ஆகாசம் ?

பனித்துளி அழுதுகொண்டே சொன்னது : "நான் உன்னைப்பற்றிக் கனவு காண்பது உண்டு; ஆனால் உனக்குத் தொண்டாற்றவே என்னால் முடியாதென்று வருந்துகிறேன். பெருந்தலைவ! நான் குறுகிய உருவந் தாங்கி இருப்பதால், என்னுள் உன்னைக் கொள்ள முடியாதல்லவா ? எனது வாழ்க்கையே, கண்ணீர்க் கதம்பம்."

சூரியன் பதிலிறுத்தது : "எல்லையற்ற ஆகாசத்திற்கே நான் வெளிச்சம் தருகிறேன், இருந்தாலும் ஒரு சிறு பனித்துளியிலும் என் ஒளி புகுந்து நிலைத்து நிற்க முடியும் ; உன்போன்ற ஒரு சிறு பனித்துளியிலும், நான் ஒரு ஒளித்துளியாகப் புகுந்து இலங்க முடியும் ; உனது சிறு உயிர்வடிவமும், சிரிக்கும் ஒளி முத்தாக விளங்க முடியும்."

(63)

எனது காதல் ஒரு அளவில் கட்டுப் பட்டது; ஆனால் சாதாரணமாக, காதல் கட்டை மீறிப் புரண்டோடும் இயல்பு உடையது, ஒரு கணத்தில் வேகும் பாத்திரத்தையே உடைத்தெறிந்து விட்டுக் கொந்தளித்து வழிந்தோடும் திராக்ஷை ரசம் போன்றது.

பூமியில் மழையை வருஷித்து, உலர்ந்த பூமிக்கு உயிரளித்து, வீட்டிலுள்ள மண் பாண்டங்கள் நிறையப் பொழிந்து வாழ்த்தும், தூய மழை போன்ற, குளிர்ந்த தூய காதலை என்னிடம் அனுப்புவாயாக!

வாழ்க்கையின் விரிகின்ற கிளைகளின் வழியே உள்ளே, பரவிப் பாய்கின்ற பால் வழியே, உட்புகுந்து கனிகளையும் மலர்களையும் சிருஷ்டிக்கும் ஆற்றல் பெற்ற மழையைப்போல, வாழ்வின் நடுவில் பாய்ந்து ஊறி மலர்ந்து கனிகின்ற காதலையே என்னிடம் அனுப்புவாயாக!

சாந்தி நிறைவில் அமைதிபெறும் இதயத்தை வழங்கும் தூய காதலையே என்னிடம் அனுப்புவாயாக!

(64)

காட்டு மரக்கும்பலில், ஆற்றின்மேல் கரையில் சூரியன் மறைந்து அஸ்தமிக்கிறது.

பன்னசாலைப் பையன்கள் ஆடுமாடுகளை ஆச்சிரமத்துக்கு ஓட்டி வந்துவிட்டார்கள்; கௌதம முனிவரின் முன், குளிர் காய்ந்துகொண்டு பாடம் கேட்கிறார்கள்; நூதன முறையில், ஒரு பையன் முனிவரிடம் நெருங்கி வந்து, கனிகளையும் மலர்களையும் அவர் பாதக் கமலங்களில் வைத்து வணங்கி, இனிய பட்சிக் குரலில் கேட்டான்: ''பிரபுவே! இறுதி உண்மைப்பாதையில் உணர்ந்து செல்வதற்கே, நான் உம்மிடம் வந்திருக்கிறேன். என் பேர் சத்யகாமா''

உடனே குரு பதிலிறுத்தார்: ''நான் உன்னை ஆசீர்வதிக்கிறேன். நீ எந்த இனத்தைச் சேர்ந்தவன்? உயர்ந்த

உண்மை யறிவைப் பெறுவதற்கு பிராமணன் ஒருவன்தான் தகுதியுடையவன்.''

பையன் தொடர்ந்தான்: "குருவே! நான் இன்ன ஜாதி என்பது எனக்கே தெரியாது. எனது தாயைக் கேட்டு வந்து சொல்லுகிறேன்.''

உடனே சத்யகாமா விடை பெற்றுக் கொண்டான்; ஆழமற்ற ஆற்றைத் தாண்டினான், தாயின் குடிசையை அடைந்தான். உறங்கும் கிராமத்தின் இறுதிப்பகுதியில், பாலைவன மணல் ஓரத்தில் உள்ளது அந்தக் குடிசை.

குடிசையிலுள்ள அறையில், விளக்கு மங்கி எரிந்து கொண்டிருந்தது; தன் மகன் வரவையே எதிர் நோக்கிய வண்ணம், வீட்டுக் கதவண்டை காத்துக் கொண்டிருந்தாள், அவனுடைய அருமை அன்னை. மகனைத் தழுவினாள், உச்சி முகர்ந்து முத்தமிட்டாள், குருவினிடம் அவன் சென்று திரும்பிய விஷயத்தை விசாரித்தாள்.

பையன் கேட்டான், "என் அருமைத் தாயே! என் தந்தையின் பெயரென்ன? உயர்ந்த ஞானத்தைப் பெறுவதற்கு ஒரு பிராமணனே தகுதியுடையவன் என்று கௌதம முனிவர் கூறிவிட்டார், அம்மா !"

தாய் தன் கண்களைத் தாழ்த்திக் கொண்டு இரகஸ்யமாகச் சொன்னாள்: "எனது இளம்பருவத்தில், நான் பரம ஏழை; எனக்கு எஜமானர்கள் பலர். எனது குழந்தைச் செல்வமே! கணவனற்ற என் கைகளில், நீ அருமைக் குழந்தையாக வடிவுபெற்று வந்துவிட்டாய்."

காட்டில் ஆச்சிரமத்தில் உள்ள மரக் கூட்டங்களின் தலையில், சூரியனின் காலைக் கதிர்கள் ஒளியை வாரி இறைத்தன.

பள்ளசாலைப் பையன்கள், காலையில் குளித்துவிட்டு, நனைந்த குடுமி காய்வதற்கு முன், குருவின் பார்வையில் பழைய மரத்தின் கீழ் உட்கார்ந்தனர்.

இந்த நேரம் வந்தான் சத்யகாமா !

முனியின் பாதக்கமலங்களில் வணங்கி விட்டு, மௌனமாக நின்றான் சத்ய காமா.

குரு கௌதமர் அவனைக் கேட்டார்: "நீ என்ன ஜாதி என்று சொல்வாயா?"

சத்யகாமா பதில் சொன்னான்: "பிரபுவே! நான் அதை அறிந்தே னில்லை. என் தாயை வினவியதில் அவர்கள் சொன்னதும் இதுவே, 'எனது இளமைப் பருவத்தில், நான் பல எஜமானர்களிடம் வேலை பார்த்து வந்தேன். கணவனற்ற உனது தாய் ஜபலாவின் கரங்களில், நீ வந்து சேர்ந்து விட்டாய். இதுவே எனக்குத் தெரியும்.'"

கலைக்கப்பட்ட தேன் கூண்டிலிருந்து கோபம் பொங்கி வரும் தேனீக்களின் முணு முணுத்தல் போல, தள்ளப்பட்ட கீழான ஜாதியினன் அந்தப் பையன் என்றும் அவனுடைய வெட்கமற்ற இறு மாப்பைப் பற்றியும் அங்கு குழுமியிருந்த மாணவர்கள் தெளிவற்ற குரலில் முணு முணுத்தார்கள்.

தரு கௌதமர் ஆசனம் விட்டு எழுந்தார், தனது கைகளை அன்புடன் நீட்டி, சத்யகாமாவை இதய பூர்வமாகத் தழுவிக்கொண்டு கூறினர்: "எனது அருமைக் குழந்தையே! பிராமணோத்தமர்களைவிட நீயே சிறந்தவன், நீயே உண்மைக்கு உரியவன்."

(65)

இந்தப் பட்டணத்தில், காலை சூரியோதயக் கதிர்கள் பட்டு இன்று காலை முழுதும் கதவு திறந்த நிலையில், கதிரொளி உட்புகுந்து தனது அந்தரங்கச் செய்தியை நிறைவேற்றிக் கொள்ளும்படியான வீடு ஒன்றுதான் ஒரு வேளை இருக்கக்கூடும்.

அடைத்த வேலிகளிலும் தோட்டங்களிலும், பூக்கள் மலர்ந்து விட்டன. முடிவற்ற காலமாக யாத்திரை செய்து வந்திருக்கும் அந்த நன்கொடையை, இன்று காலையில்தான், ஒரு இதயம் அம்மலர்களில் கண்டு உணர்ந்திருக்கக் கூடும்.

(66)

என் இதயமே, கேள்! அவனது புல்லாங்குழலினின்று வருகின்ற இசை வெள்ளத்திலே, காட்டு மலர்களின் புதிய மணம் பரிமளிக்கிறது; இலைகள் மிளிர்கின்றன; தண்ணீர் மின்னி வருகிறது; ஆழ்ந்த நிழல்களில் தேனீக்களின் இனிய ரீங்காரம் சுழன்றோடி வருகிறது.

என் நண்பனின் உதடுகளிலிருந்து புன்முறுவலைத் திருடி, என் வாழ்க்கையோட்டத்தில் தடவுகிறது, அந்தப் புல்லாங்குழல் கானம்.

(67)

எனது பாடல்களின் ஓட்டத்திற்கு அப்பால். தன்னந் தனியாய், நீ நின்று நிலவுகின்றாய்.

எனது சுருதி அலைகள் உனது பாதக் கமலங்களைக் கழுவுகின்றன; ஆனால் உனது பாதங்களைத் தொட்டு ஸ்பரிசிக்கும்வழி இன்னும் எனக்குப் புலப்படவே இல்லை.

நான் உன்னுடன் விளையாடும் இந்த விளையாட்டு, வெகு தூரத்திலிருந்தே நிகழ்கிறது.

நமது பிரிவின் துன்பம்தான், எனது புல்லாங்குழலின் வழியே உருகிக் கசிந்து, இசை வெள்ளமாக ஓடுகிறது.

உனது தோணி கடலைத் தாண்டி எனது கரையைச் சேர்ந்ததும், நீயே எனது புல்லாங்குழலை உனது கரங்களில் எடுத்துக்கொள்ளும் அந்த அரிய நேரத்தையே நான் எதிர்பார்த்து நிற்கிறேன்.

(68)

திடீரென்று, இன்று காலையில் எனது இதய ஜன்னல் திறந்தது, — உனது இதயத்தையே எட்டிப் பார்க்கும் ஜன்னலும் இதுவேதான்!

என்னை நீ அறிந்து கொள்ளும் பேரும், சித்திரை இலைகளிலும் மலர்களிலும் பொறிக்கப்பட்டிருப்பதைக் கண்டு நான் அதிசயப்பட்டு, மௌனத்தில் ஆழ்ந்து விட்டேன்.

(69)

என் இதய நடுவில் நீயே நின்று நிலவுகின்றாய்; அதனால்தான், என் இதயம் அலைந்து திரிந்தபோது, அவள் உன்னை ஒருபோதும் காணமுடியாது போயிற்று.

இறுதி நிமிஷம்வரை, எனது ஆசைகளினின்றும் நம்பிக்கைகளினின்றும் நீயே மறைந்து ஒளிந்து கொண்டாய்; ஏனெனில் அவைகளிலேதான், நீ குடியிருந்தாய்.

எனது இளமைப் பருவ விளையாட்டில் நான் விறு விறுப்பாய் ஓடிவரும் போது, நான் அந்த இன்பத்தைப் பொறுப்பற்று மறந்தேன்.

எனது வாழ்க்கையின் உற்சாகங்களில், நீயே எனக்குப் பாடியிருக்கின்றாய்; நான் உனக்குப் பாடவே மறந்து விட்டேன்.

(70)

விண்ணில் நீ கைவிளக்கை எடுத்துப் பிடிக்கும்போது, என் முகத்தில் அதன் ஒளி பரவி விழுகிறது; அதன் நிழல் உன்மேல் விழுகிறது.

என் இதயத்தில் காதல் தீபத்தை நான் தாங்கி நிற்கும்போது, அதன் ஒளி உன்மேல் விழுகிறது; அந்த நிழலில், பின்புறம் நான் தனியே தயங்கி நிற்கிறேன்.

(71)

ஓ அலைகளே, விண்ணை விழுங்கும் அலைகளே, ஒளி மிளிரும் அலைகளே, வாழ்வில் நர்த்தனம் செய்யும் அலைகளே, ஆனந்தச் சுழலில் களித்தோடும் அலைகளே,—என்றும் பாய்ந்தோடும் அலைகளே!

நட்சத்திரங்கள் அலைகளில் தாலாட்டப்படுகின்றன; பலவர்ணச் சிந்தனை அலைகள், கடலலைகளினின்று பெருக்கெடுத்து ஓடுகின்றன, வாழ்க்கைக் கரையோரத்தில் அவைகள் எங்கும் சிதறிக் கிடக்கின்றன.

பிறப்பும் இறப்பும், அலைகின்ற அலையின் நாத நிலையை ஒட்டி ஏறி இறங்குகின்றன;

என் இதயம், ஒரு கடல் பறவை போன்று, தன் சிறகுகளை விரித்துக் கொண்டு, இன்பவெறியில் கீச்சிட்டுப் பறந்தே செல்கிறது.

(72)

உலகமனைத்திலிருந்தும் அந்த இன்பம் ஓடோடியும், எனது உடலைக் கட்டியது.

விண்ணொளிகள், அவள் விழிப்புறும் வரை, அவளையே முத்தமிட்டன.

விரைந்தோடும் கோடை காலங்களில் புஷ்பித்த மலர்கள், அவள் மூச்சைக் கண்டு பெருமூச்செறிந்தன; அவளுடைய சலனங்களில், காற்றின் குரல்களும் தண்ணீர்க் குரலும் கலந்து குழைந்து பாடலை ஆரம்பித்துவிட்டன.

காடுகளிலும் மேகங்களிலும் சிதறிக் கிடக்கும் வருணா அலைவெள்ளம், அவள் உயிரிலேயே கலந்தோடியது. சகல பொருள்களின் இராகங்களும், அவளுடைய அவயவங்களைத் தழுவியே உருவாக்கின.

அவளே எனது மணப்பெண்,—என் இல்லத்தில் அவள் தனது விளக்கை ஏற்றி வைத்திருக்கிறாள்.

(73)

வசந்தம், தனது இலைகளையும் மலர்களையும் சுமந்துகொண்டு, என் உடலிலே புகுந்துவிட்டது

தேனீக்கள், காலை முழுதும் அங்கேயே ரீங்காரமிடுகின்றன; காற்றலைகள், நிழல்களில் இன்பகரமாக விளையாடுகின்றன.

ஒரு இனிய அருவி, என் இதய நடுவினின்று குதித்தோடுகிறது.

பனியில் குளித்த காலைக்கதிர் போல், இன்பம் எனது கண்மணிகளைக் கழுவுகிறது; வீணையில் நரம்புகள் நாதமிடுவதுபோல, எனது அவயங்களில் உயிர் நாதம் துடி துடிக்கிறது.

எனது வாழ்வின் கரையோரத்தில், நீ தனியாகவா அலைந்து கொண்டு திரிகிறாய்? என் வாழ்க்கைக்கரையில், அலை பொங்கிக் குதிக்கிறதே! ஓ எனது நிரந்தர நாட்களில் துணை நின்ற காதலனே!

பலவர்ணச் சிறகு பெற்ற விட்டில் பூச்சி போல, எனது கனவுகள் உன்

லேச் சுற்றி வருணக் கனவுகளாகப் பறந்தா வருகின்றன ?

எனது இல்லத்தின் இருண்ட குகை களில் எதிரொலிக்கும் பாடல்கள், உனது பாடல்கள் தானு ?

இன்று எனது நாத நரம்புகளில் திரண்டு ஒலிக்கின்ற மணி யோசை களின் நாதப்பிரம்மத்தையும், எனது நெஞ்சில் நர்த்தனம் செய்கின்ற இன்பப் பாதமலர்களேயும், எனது யாக்கையில் சிறை விரித்து ஓய்வற்றுப் பறந்து வரும் உயிரின் கூக்குரலேயும், உன்னேத் தவிர வேறு யாரால் கேட்டு அனுப விக்க முடியும் ?

(74)

எனது கட்டுகள் அறுபட்டன, எனது கடன்கள் தீர்ந்தன, எனது கதவு திறந் தது, நான் எங்கும் போகிறேன்.

அங்கே அவர்கள் ஒரு மூலேயில் பதுங்கிக்கொண்டு, மங்கி வெளுத்த கால மணிகளேக் கொண்டு தறியில் வலே நெய்கிருர்கள் ; புழுதியில் உட்கார்ந்து

கொண்டு, நாணயங்களையும் எண்ணிப் பார்த்துக்கொண்டே, என்னை மீண்டும் அவர்கள் அழைக்கிறார்கள்.

ஆனால் எனது போர்வாள் தயா ராகி விட்டது, நான் எனது போர்க் கவசத்தையும் அணிந்துகொண்டு விட் டேன், எனது குதிரை ஓடத் தயாராக இருக்கிறது.

எனது இராஜ்யத்தைப் பெற்று வெற்றியும் பெறுவேன்.

(75)

அன்றொருநாள், பெயரின்றி, நிர்வா ணமாக, நான் அழுது கொண்டே, உனது மண்ணுலகுக்கு வந்தே னல்லவா?

இன்றே எனது குரல் இன்புற்றி ருக்கிறது; ஆனால் பிரபுவே! நான் என் வாழ்க்கையை நிரப்பிக் கொள் வதற்காகவே, நீயோ எனக்கு இடம் விட்டு ஒதுங்கி நிற்கின்றாய்?

உனக்கு வணக்கம் செலுத்தி நான் பாட்டுப் பாடும்போதும், ஜனங்கள் அங்கு வந்து அதற்காக என்னை

யும் அன்புடன் நேசிப்பார்கள் என்றும் என் உள்ளத்தில் ஒரு இரகஸிய நம்பிக்கையும் உண்டுதான்.

நீ என்னைக் கொண்டு வந்து சேர்த்த இவ்வுலகையும் நான் விரும்புகிறேன் என்பதைக் கண்டு பிடிக்கவே நீயும் ஆசைப்படுகிறாய்.

(76)

பயந்த கோழை மனத்துடன், என்னைக் காப்பாற்றிக் கொள்ளக்கூடிய நிழலின்கீழ், மனங்கலங்கிப் பதுங்கினேன்; ஆனால் இப்போது, இன்ப அலையின் சிகரம் என் இதயத்தையே வெற்றியுடன் இழுத்துச் செல்வதால், அலை சுழித்தோடுகின்ற துன்பப் பாறையிலும் என் இதயம் தொத்திக்கொள்கிறது.

முன், என் வீட்டின் ஒரு மூலையில் உட்கார்ந்துகொண்டு, விருந்தாளியின் கௌரவத்திற்கு என் வீடு பொருந்தாமல் குறுகிக் கிடப்பதை நினைத்து வருந்துவதுண்டு; ஆனால் இப்போது எதிர்பாராத இன்பத்தால் என் வீட்டின் கதவு திறந்து கிடப்பதால், உனக்கும்

உலகம் அனைத்துக்குமே இடம் தரா எனது இல்லம் போதுமென்று அறிகிறேன்.

முன், என் உடம்பைப்பற்றி அதிகமாய்க் கவலைப்பட்டுக் கொண்டும், என்னையே அலங்கரித்துக்கொண்டும் வாசனை பூசிக்கொண்டும் அதி ஜாக்கிரதையாக நுனிக் காலால் நடந்து செல்வேன்; ஆனால் இப்போது, ஒரு இன்பச் சுழல் காற்று என்னைப் புழுதியில் தூக்கி எறிந்து விட்டபடியால், நான் ஒரு குழந்தைபோல் உனது திருமலரடிகளில், சிரித்துக்கெண்டு மண்ணில் கிடந்து புரளுகிறேன்.

(77)

உலகம் உன்னுடையது — இந்த நிமிஷமே உன்னுடையது, என்றும் உன்னுடையது.

எனது அரசே! உன்னிடம் வறுமையே இல்லாததால், உனது செல்வத்தில் நீ ஆசைவெறி கொள்ளவில்லை.

பொருளுக்குப் பொருளேயில்லை என்று நீ உணர்ந்து விட்டாய்.

ஆதலால், மெதுவாக காலக்கிரமத்தில், உனது அனைத்தையும் என்னிடம் தந்து உதவி, தொடர்ந்த முயற்சியால், என்னுள் உனது அரசை வெற்றியுடன் ஸ்தாபித்து விட்டாய்.

நாள்தோறும், எனது இதயத்திலிருந்து உனது சூரியோதயத்தை விலைக்கு வாங்குகிறாய்; உனது அன்பு எனது வாழ்க்கை உருவில் செதுக்கப்பட்டு வளர்வதை நீயே கண்டு கொண்டாய்.

(78)

பறவைகளுக்கு நீ பாடல்களைக் கொடுத்தாய், மீண்டும் பறவைகள் உனக்குப் பாடல்களையே திரும்பத் தருகின்றன.

எனக்கு நீ குரலையே கொடுத்தாய், இருந்தாலும் கொடுத்ததற்கு மேல் கேட்டாய், நானும் பாடுகிறேன்.

உனது காற்றுகள் இலேசாக பளுவற்றுப் பறக்கின்றன: அவைகளின் சேவையில், வேகம் அதிகம் தான். நீ என் கைகளில் சுமையேற்றி வைத்தாய்,—நானே சுமையைக் குறைத்துக்

கொள்ள வேண்டு மென்றும், உனது சேவையில் நானே சுமையற்ற சுதந்திரம் இறுதியில் முயன்று பெற வேண்டுமென்றும் நினைத்துத்தானே அவ்விதம் செய்தாய்!

நீ பூமியை சிருஷ்டி செய்து, நிழல்களை ஒளிச் சிதர்களால் நிறைத்து வைத்திருக்கிறாய்.

நீ அங்கே நிறுத்திக் கொண்டாய்; உனது விண்ணுலகைச் சிருஷ்டிப்பதற்காகவே, என் கைகளைக் காலி செய்து புழுதியில் தள்ளிவிட்டாய்.

மற்ற ஜீவராசிகளுக்கெல்லாம் நீ கொடுக்கின்றாய்; என்னிடமோ, நீ கேட்கின்றாய்.

வெயிலிலும் மழையிலும் எனது வாழ்வும் பழுத்து, அறுவடைகாலம் நெருங்கிவிட்டது; நீ விதைத்ததை விட நான் அதிகமாகவே அறுத்துக் குவிக்கிறேன்.

தங்க தானியக் களஞ்சியத்தின் தலைவ! நான் மேலே செய்திருப்பதெல்லாம், உனது இதயத்தின் இன்பத்தை வளர்க்கின்றதல்லவா?

(79)

ஆபத்துகளினின்று என்னைக் காப்பாற்றும்படி நான் உனக்குப் பிரார்த்தனை செய்யவில்லை; துன்பத்தை எதிர்த்து நிற்கும் ஆற்றலையே வேண்டி இறைஞ்சுகின்றேன்.

எனது துன்பத்தைத் தடுக்கும்படி நான் உன்னைக் கெஞ்சிக் கேட்கவில்லை; துன்பத்தை எதிர்த்து வெற்றிக்கொள்ளும் இதய மனோதிடத்தையே இறைஞ்சி நிற்கின்றேன்.

எனது வாழ்க்கைப் போராட்டத்தில், துணைவர்களைத் தேடி அலையாமல், எனது பலத்தையே நம்பிப் போரிடத் தைரியம் வழங்குவாயாக!

தப்பிக்க வேண்டுமே என்ற கவலையில் பயந்து பதுங்காமல், எனது சுதந்திரத்தைப் பொறுமையுடன் பெற்று வெற்றி பெறுகின்ற ஆழ்ந்த நம்பிக்கையை என் உள்ளத்தில் தூண்டுவாயாக!

எனது வெற்றியில் மாத்திரம் உனது கருணையை உணர்ந்து நான் ஒரு

கோழையாக மாறிவிடாமல், எனது தோல்வியிலும் உனது கைபிடித்துக் கரையேறலாம் என்ற மன உறுதியை எனக்கு வழங்குவாயாக!

(80)

நீ தனியே நின்றபோது, உன்னையே நீ அறிந்து கொள்ளவில்லை; இக் கரையிலிருந்து அக்கரைக்குக் காற்றுக் குமுறி ஓடியபோது, காரிய விசேஷம் ஒன்றுமே குரல் எடுக்கவில்லை.

நான் உன்னிடம் வந்தேன், நீ விழிப்புற்றாய்; ஆகாசங்கள் ஒளிக் கதிர்களாகவே மலர்ந்து விட்டன. எங்கும் ஜோதி வெள்ளம்.

பல மலர்களில், நீ என்னையே திறந்து வைத்தாய்; பலவடிவத் தொட்டில்களில் என்னையே மறைத்தாய்; வாழ்வில் மீண்டும் என்னையே கண்டு கொண்டாய்.

நான் உன்னிடம் வந்தேன், உனது இதயம் விம்மிப் பெருமூச்செறிந்தது; உனக்குத் துன்பமும் வந்தது, இன்பமும் வந்தது.

நீ என்னைத் தொட்டாய், உடனே அன்பில் சிலிர்த்துப் போனாய்.

ஆனால் எனது கண்களில், வெட்கம் மெல்லிய திரைபோலப் படர்ந்திருக்கிறது; எனது மார்பில், பயம் துடி துடிக்கிறது; என் முகம் திரையிட்டிருக்கிறது; உன்னை நான் காணாத நேரமெல்லாம், நான் அழுதே தீர்க்கிறேன்.

இருந்தாலும், என்னைக் காண்பதற்காகவே உன் இதயத்தில் வளர்கின்ற நிரந்தர தாகத்தை நானும் அறிவேன்,- சூரிய உதயக் கதிர்கள் என் கதவைத் தொடர்ந்து தட்டும்போது, உனது நிரந்தர தாகத்தை நான் நன்கு அறிவேன்.

(81)

கால அளவை மீறிய தொடர்ந்த கவனத்துடன், எனது நெருங்கிவரும் காலடியோசைகளையே நீ கேட்டுக்கொண்டிருக்கிறாய்; காலையில் அருணோதயத்திலும், வெடித்துவரும் ஒளிச்சிதர்களிலும், உனது சந்தோஷம் ஓங்கி உறுதியடைகிறது.

உன்னிடம் நான் நெருங்கி வரவர, கடலின் கொந்தளிப்பு இன்னும் ஆழத்தில் நர்த்தனம் செய்கிறது.

உனது கைகளை நிரப்பும் கிளை ஒளி மரமே, உனது உலகம்; ஒளி அலையாகச் சிதறி உனது கரங்களில் மண்டிவிடுகிறது; ஆனால் உனது சொர்க்கம், என் இதயத்தில் இரகஸ்யமாகவே யிருக்கிறது.

பெருங் கூச்சத்தோடு, நெருங்க வொட்டாத காதலில் மலர்கிறது அம் மொட்டு.

(82)

மௌனமாகச் சிந்தித்து, சிந்தனை நிழல்களில் உட்கார்ந்து கொண்டு உனது பேரையே சொல்லிவிடப் போகிறேன்.

சொல் முழக்கமின்றியே நான் அதைச் சொல்லிவிடுவேன்; காரணமின்றியே நான் அதைச் சொல்லிவிடப் போகிறேன்.

'தாய்' என்று சொல்லும் ஆற்றல் பெற்ற குழந்தை, அதை அவ்விதம் சொல்லவருகிறதே என்ற சந்தோஷத்துடன் தன் தாயின் பேரை நூறு தடவை "தாயே, தாயே!" என்று சொல்லிப் புலம்புகிறதல்லவா? அத்தகைய குழந்தைதான் நானும், — ஆதலால் உனது பேரைச் சொல்லத் தயங்கமாட்டேன்.

(83)

என்னுள் நட்சத்திரங்கள் பிரகாசிப்பதை நான் நன்கு உணர்கிறேன்.

ஒரு வெள்ளம்போல, உலகம் என்னுள் கொடிய வேகத்தில் பெருக்கெடுத்தோடுகிறது.

என் உடலில் புஷ்பங்கள் மலர்ந்துவிட்டன. நிலம், நீர், இரண்டின் இளமை அனைத்தும், கலந்து என் இதயத்தின் ஆழத்தில் பூம்புகையாகக் கனன்று இளகி மணம் கமழ்கிறது. சகல பொருள்களின் ஆவியும் ஒரு

புல்லாங்குழல் கானம் போல, எனது சிந்தனைகளில் மோதி விளையாடுகிறது.

* * *

உலகமே உறங்கும்போது, நான் உன் கதவண்டையே வருகிறேன்.

தாரகைகள் மௌனம் சாதிக்கின்றன; நான் பாடவே அஞ்சி நிற்கின்றேன்.

நான் காத்தே நிற்கிறேன், கவனிக்கிறேன்; அப்போது, இரவின் உயர்ந்த மேல் முகப்பில், உனது நிழலுருவம் செல்வதைக் காண்கிறேன். உடனே இதயப் பூரிப்புடன் வீடு திரும்புகிறேன்.

அப்புறம், மறுநாட் காலையில் நான் வீதி வழியே பாடிக்கொண்டு போகிறேன்; வேலியில் வளர்கின்ற மலர்கள் என்னை நோக்கி பதிலிறுக்கின்றன; காலைக் காற்று அதைக் கேட்கிறது;

யாத்ரிகர்கள், திடீரென்று அங்கே நின்று, என் முகத்தையே கவனிக்கிறார்கள்; அவர்களை நான் பேர் சொல்லி

அழைத்தேனே என்று எண்ணு கிறார்கள், அவர்கள்.

*   *   *

உனது மனோரதங்களை நான் ஆழ்ந்து கவனிக்குமாறு, என்னை உன் கதவண்டை காவல் வைப்பாயாக; உனது அழைப்பைப் பெற்று, உனது ஆக்ஞைப்படி உனது இராஜ்யத்தில் நான் சுற்றித்திரிய அனுமதிப்பாயாக!

சோர்வுற்ற தளர்ச்சியில் நான் மூழ்கி மறைந்துவிடா வண்ணம் நீ பாதுகாப் பாயாக!

எனது வாழ்க்கை, மிடியில் மடிந்து கிழிந்து சிதறிப்போகாமல், காப்பாற்று வாயாக!

மனக்கலக்கத்தில் மதிமயங்கி மண் ணில் மடிந்து விடுவேனோ, என்ற சந்தேகங்கள் என்னைச் சுற்றிச் சூழ்ந்து விடாமல், காத்தருள்வாயாக!

பல பண்டங்களைச் சேகரிப்பதற்காக, பல பாதைகளில் என் மனம் குழம்பிச் சிதறிவிடாமல் துணைபுரிவாயாக!

பலர் ஆட்சிகளில் என் இதயம் அடிமைப்படா வண்ணம், என்னைக் காப்பாயாக!

நான் உனது சேவகன் என்ற முறையில் தைரியங்கொண்டு இறுமாப்பு அடையாவண்ணம், எனக்கு அருள் புரிவாயாக!

(84)

அங்கே வெகுதூரத்தில் மரணத்தின் அமளியைக் கேட்கிருயா? ஒரு பெருங் குழப்பம்!

நெருப்பு வெள்ளத்தின் மத்தியில், விஷமுண்ட மேகங்களின் நடுவில், அந்த மாலுமியின் கூக்குரல் கேட்கிறது; கப்பலை பெயரில்லாத கடற்கரைக்குத் திருப்பிக்கொண்டு வரும்படி கப்பலோட்டிகளை ஆக்ஞையிடுகிருன், அந்த மாலுமி!

ஏனெனில், துறைமுகத்தில் தங்க வேண்டிய நேரம் தீர்ந்துவிட்டது—

அங்கே தான் ஒரே பழைய சாமானை மீண்டும் மீண்டும் முடிவற்று வாங்கி விற்கப்படுகிறது;

அங்கே தான் இறந்த பண்டங்கள், உழைத்துக் களைத்து உண்மையை

எற்றி எறிந்துவிட்டு, அலைகளில் அதிர்ந்து மிதந்து வருகின்றன.

திடீரென்று பயத்தால் விழிப்புற்று, அவர்கள் வினவுகிறார்கள் ; "தோழர்களே ! இப்போது என்ன மணியடிக்கிறது ? அருணோதயம் எப்போது ஆரம்பமாகும் ?"

விண்மீன்களையே, மேகங்கள் மூடி விட்டன — அருணோதயத்தை சுட்டிக் காட்டும் விரலை அங்கிருந்து யாரால் பார்க்க முடியும் ?

கையில் துடுப்பு தாங்கி, அவர்கள் ஓடோடியும் வருகிறார்கள் ; படுக்கைகள் காலி செய்யப்படுகின்றன ; தாய் பிரார்த்தனை செய்கிறாள் ; மனைவி கதவண்டை நின்று கவனிக்கிறாள் ;

பிரிவின் புலம்பல் ஆகாசத்தையே நோக்கி எழுகிறது ; அங்கே இருட்டில், மாலுமியே பேசுகிறான், "கப்பலோட்டிகளே, வந்து விடுங்கள் ! துறைமுகத்தில் தங்கும் காலம் தீர்ந்து விட்டது !"

உலகத்திலுள்ள சகல தீமைகளும் கரை புரண்டோடுகின்றன ;

இருந்தாலும், துடுப்புத் தள்ளுபவர்களே! உங்களுடைய ஆன்மாக்களில், துன்பத்தால் வாழ்த்தப்பட்டு, உங்களுக்கு உரிய ஸ்தானங்களை அடையுங்கள்;

சகோதரர்களே! யாரைக் குறை கூறுகிறீர்கள்? உங்கள் தலைகளைக் கீழே போடுங்கள்! பாவம், உங்களுடையதும் எங்களுடையதும் தான்! இறைவன் இதயத்தில் பல யுகங்களாக வளர்ந்து வருகின்ற கோபக் கனல், நெருப்பு!

பலஹீனர்களின் கோழைத்தனம், பலமுள்ளவர்களின் கொடிய இறுமாப்பு, கொழுத்த செல்வர்களின் பேராசை, தீங்கிழைக்கப்பட்டவர்களின் குரோதம், ஜாதி, உன்மத்தம், மனிதனுக்கு மனிதன் செய்த கேடு—

இவை யெல்லாம் கலந்து கனன்று கடவுளையே தாக்கியதில், இறைவன் சாந்தி இழந்து, புயலே வெடித்து விட்டதல்லவா?

பழுத்த கனி ஓடு போல, புயல் வெடித்துத் தனது இதயத்தையே

சுக்கு நூருகச் சிதறவடித்து, இடி யதிர்ச்சிகளேயும் அள்ளி வீசட்டும்.

உன்னேயே புகழ்ந்து பெருமையடித்துக் கொள்வதையும், உனக்கு, நேர்ந்த அவமானத்தைப்பற்றி அலறுவதையும் அறவே நிறுத்துவாய்!

மௌனமாகப் பிரார்த்தனே செய்து வணங்கி, அந்தப் பேரிலாக் கரைக்குத் தோணியைச் செலுத்துவாயாக!

பாவங்களேயும் தீமைகளேயும் நாம் ஒவ்வொருநாளும் அறிந்தே இருக்கிரேம்; மரணத்தையும் நாம் அறிந்து கொண்டோம்.

குறுகிய கால அளவில், தோன்றி மறையும் மின்னல் சிரிப்புடன், மேகங்கள் நம்மைக்கண்டு நகைப்பது போலவே, அவைகளும் நமது மண்ணுலகில் பரவிச் செல்கின்றன.

திடீரென்று அவைகள் நின்றுவிட்டன, உற்பாதமாகவே மாறிவிட்டன.

அவைகளின் முன், மனிதர்கள் எதிர்த்து நின்று என்ன சொல்ல

வேண்டும்? "ஓ, விபரீத வடிவமே! தினம் தினம், உன்னைப்பிடித்து அடக்கி வெற்றி பெற்றே, நாங்கள் வாழ்ந்து வந்திருக்கிறோம்.

கலகமின்மையே உண்மை யென்றும், நன்மையே உண்மை யென்றும், அழியாப் பரம்பொருளே உண்மையென்றும் நம்பியே, நாங்கள் உயிரையே விடுகிறோம்!"

மரணத்தில், மரணமில்லாத அழியாமை நின்று நிலவாவிட்டால்;

துன்பச் சட்டையைக் கிழித்துக் கொண்டு ஆனந்த மயமான ஞானம் மலர்ந்து உதிக்காவிட்டால்;

பாவம், தன்னையே வெளிப்படுத்திக் கொண்டு மடிந்து மறையாவிட்டால்;

இடம்பம், தனது அலங்காரச் சுமையில் உடைந்தொழிந்து போகாவிட்டால்;

காலை ஒளியில் மரணத்தை நோக்கி விரைந்தோடும் நட்சத்திரங்கள் போல, இந்த மனிதர்களை வீட்டை விட்டுத்

தூரத்தியே செல்லும் 'நம்பிக்கை' எங்கிருந்து உதயமாகிறது ?

தியாகிகளின் இரத்தமும், தாயின் கண்ணீரும், விண்ணுலகையே விலைக்கு வாங்கும் சக்தி பெறவில்லையா? பயனற்று இம்மண்ணிலா மடிந்து விடும், அந்தத் தியாகிகளின் இரத்தமும், தாயின் கண்ணீர்த் திவலைகளும் ? இல்லவே இல்லை.

மனிதன் தனது மரணாதீன பந்தங்களை அறுத்துச் செல்லும்போது, எல்லையற்ற அகண்ட பரம்பொருள் அவனுக்குத் தரிசனம் அளிக்காதா ?

(85)

வீதியில் நான் நிற்கும்போது, தோல்விப் பாடலைப் பாடும்படி, எனது தலைவன் ஆக்ஞை பிறந்தது; ஏனெனில் தோல்வி எனும் மணப் பெண்ணையே அவன் இரகஸ்யமாகக் காதலிக்கிறான்.

அவள் இருண்ட முகமூடியைப் போட்டுக்கொண்டு நிற்கிறாள் : கூட்டத்தினின்று, அவள் முகத்தைப் பார்க்க முடியாமல் மறைத்துக் கொண்டு விட்

டாள்: ஆனால் இருட்டிலும் அவன் மார்பில், மாணிக்கம் மின்னிக் கொண்டிருக்கிறது.

பகலில் அவன் புறக்கணிக்கப்படுகிறான்; ஆனால் இரவில் ஏற்றிய விளக்குகளுடன் பனியில் நனைந்த மலர்களுடனும், இறைவன் அவனுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறான்.

கண்களைக் கீழே தாழ்த்திக்கொண்டு, அவள் மௌனம் சாதிக்கிறாள்; அவள் தன் இல்லம் விட்டு வெளியேறி வந்துவிட்டாள்: அவள் வீட்டிலிருந்து வருகிறது, அந்தத் துன்பப் புலம்பல்.

வெட்கத்திலும் துன்பத்திலும் மூழ்கி மலர்ந்து வந்த அந்த இனிய முகத்தையே நோக்கி, நட்சத்திரங்கள் நிரந்தரமான காதல் கீதம் பாடுகின்றன.

தனி அறையில் கதவு திறந்தது, அழைப்பும் வந்துவிட்டது; இனி வரவிருக்கும் ஊடலான மர்மச் சந்திப்பைக் கருதி, இரவின் இதயம் துடிதுடிக்கிறது.

(86)

நன்றி

நடந்து செல்லும்போதே, இறுமாப்புடன் சிற்றுயிர்களைச் சிதைத்துக் கொண்டு செல்பவர்கள், மண்ணில் வளர்கின்ற இளம் பச்சைப் பயிரை இரத்த வெறியில் மிதித்துச் செல்பவர்கள் —

இவர்களே தன்னல வெறியில் இன்புற்று, — தலைவ! உனக்கு நன்றி செலுத்துவார்களாக! ஏனெனில், அவர்களே நாள்தோறும் செல்வாக்கை இறுமாப்புடன் செலுத்துகிறவர்கள்.

அதிகாரத்தைச் சுமந்து துன்புற்று, அவதியில் முகத்தை மூடிக் கொண்டு, இருட்டில் இதய விம்மலையும் அடக்கிக் கொண்டு வாழ்கின்ற, தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவன் நான்!

உனது இரவின் அந்தரங்க ஆழத்தில், அவர்களுடைய துன்பத் துடிப்பு ஒவ்வொன்றும் அதிர்ந்து கொண்டு தான் இருந்திருக்கிறது; உனது

அகண்ட மௌனத்தில், மனிதனுக்கு வந்த தீங்கு ஒவ்வொன்றும் எட்டிக் கலந்துதானிருக்கிறது.

மேலும், வருங் காலம் அவர்களுடையதன்றோ? ஓ சூரியனே! காலை மலர்களில் மலர்கின்ற அந்த இரத்தக் கறை படிந்த இதயங்களின்மேல், உனது ஜோதிக் கதிர்களை வீசுவாயாக!

அகம்பாவத்தின் களியாட்டமும் அறவே நீறாகும்படி, உனது கனலை அள்ளி எறிவாயாக!

காதற் பரிசு

தாகூர்

விலை 2—8—0

காதல் அகண்ட சக்தி வாய்ந்தது; விந்தைக் கொடியாகவே வாழ்க்கையில் படர்ந்தோடுகிறது; மனித வாழ்க்கையை மகோன்னதமாக அழகுபடுத்துவது காதல்; வாழ்க்கையின் உயிர்த் தத்துவம், காதலின் கூர்மையிலேதான் கனவு காண்கிறது. ஐம் புலன்களும் காதலின் விந்தையை அனுப விக்கும்போது, கற்பனை வளர்கிறது; கவிதை கொடி வீசுகிறது; கன்னிகள், கனிகளாகவே காதலர் கண்களில் இனிய பூரிப்புடனும் புதுமையுடனும் மலர்ந்து நிற்கிறார்கள்.

காதற் கனவில், இரண்டு அத்தியந்த ஆத்மாக்கள் கலந்து, இசைந்து, இணைந்து பழகுகிறார்கள். உலகக் காதல் விருந்தில், இதயம் கும்மாளியிடுகிறது. இயற்கையின் கானகோஷ்டிகள் அனந்தம்; எங்கும் காதல் மயம், காதல் விளக்கம்தான். இன்ப நினை வுகள், நெஞ்சின் அலைகள் சாந்தியை நோக் கியே நீந்திச் செல்கின்றன. ஆம்!

கட்டுரைக் கரும்பு

V. R. M. செட்டியார்

விலை ரூ. 2/-

பாரதியார், தாகூர், அரவிந்தர், சித்தரஞ்சன் தாஸ், தேவி, டி. கே. சி. சுத்தானந்த பாரதியார், பாரதிதாசன், ஞானி எமர்ஸன், வால்டர் பேடர், ஷெல்லி, பிளேக், ராசெட்டி, கோலரிட்ஜ், ஏட்ஸ், டுமாஸ், ஹண்ட் எல்லோரும் தங்கள் சிந்தனை வெள்ளத்தை, மின்னற் கோபுரங்களாக அலங்கரிக்கிறார்கள். கலையும் கவிதையும் இதய விந்தைகள் தான்: அற்புத இலக்கிய கோபுரந்தான். கவிஞனின் சித்திரக் கோல், காவியத்தை ஓவியமாகவே மாற்றிவிடுகிறது.